பக்கங்கள்: 17 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 01 ஞாயிற்றுக்கிழமை 14.03.2021 கதிர் 129

**இனிது ரகசியம் அல்ல!**

'நாரதர் கலகம் நன்மையில் முடியும்' என்பார்கள். பெரும்பாலும் அப்படித்தான். நாங்கள் ஊடகங்களும் அதேபோன்ற தரப்புகள் தாம். நாம் தொடக்கி விடும் கலகங்கள் பல நன்மையில் முடிவதுண்டு. கலகம் மூண்டால் தானே நியாயம் பிறக்கும்...?

பக்கம்02 »

# ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக 20 நாடுகள் வாக்களிக்க இணக்கம்!

## கொழும்பு அரசுக்கு ஆதரவு நிலையில் இதுவரை 8 அல்லது 9 நாடுகள்தான்

ஜெனிவா, மார்ச் 14

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கைக்கு எதிராக முன்மொழியப்பட்டுள்ள பிரேரணையின் இறுதி வடிவம் பெரும்பாலும் தீர்மானிக்கப்பட்டு வரையறை செய்யப்பட்ட நிலையில் இருபது நாடுகள் வரையில் அதற்கு ஆதரவாக வாக்களிப்பதற்கு இணங்கியிருக்கின்றன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

கொழும்பு அரசுக்கு ஆதரவாகத் திடமாக நிற்போம், பிரேரணையை எதிர்த்து வாக்களிப்போம் என எட்டு அல்லது ஒன்பது நாடுகள் மட்டுமே உறுதியளித்திருக்கின்றன என்றும் கூறப்பட்டது.

2

## இலங்கையின் தேசியக்கொடி அவமதிப்பு விளம்பரம் குறித்து சீனத் தூதரகம் பதில்

தேசியக் கொடி என்பது ஒரு நாட்டின் அடையாளமாகும். இது முழுமையாக மதிக்கப்பட வேண்டும்.

–இவ்வாறு கொழும்பிலுள்ள சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் தேசியக்கொடியின் உருவம் பதியப்பட்ட கால் துடைப்பான் மற்றும் பாதணிகளை உலகளாவிய

2

## வடக்கில் மேலும் ஏழு பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாணத்தில் மேலும் ஏழு பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வு

2

## விமலுக்கு எதிராக வருகின்றது நம்பிக்கையில்லாப் பிரேரணை?



அமைச்சர் விமல் வீரவன்ஸவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றை முன்வைப்பது தொடர்பில் எதிரணி எம்.பிக்கள் சிலர் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றனர் என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

இதற்கு ஏதுவான

2

## இலங்கை அரசின் ஊதுகுழல்களே பிரேரணையை எதிர்க்கின்றார்கள்

### – சுமந்திரன் எம்.பி. கடும் சாடல்

(எஸ்.நிதர்ஷன்)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் புதிய பிரேரணையை எதிர்ப்பவர்கள் இலங்கை அரசின் ஊதுகுழல்களாகச் செயற்படுபவர்களாவர்.

– இவ்வாறு சாடியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன்

யாழ். பிரதான வீதியிலுள்ள தனது அலுவலகத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது ஜெனிவாவில் கொண்டு

15

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதாவோருக்கு இனிப் புனர்வாழ்வு

### வெளியானது விசேட வர்த்தமானி

இலங்கையில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்படும் நபர்களைப் புனர்வாழ்வளிப்பதற்கான புதிய விதிமுறைகளை உள்ளடக்கிய விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கையெழுத்துடன் குறித்த வர்த்தமானி அறிவித்தல் நேற்று வெளியாகியுள்ளது.

அந்த வர்த்தமானி அறிவித்தலுக்கமைய மத அடிப்படைவாதம் மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகள்

2

DMI JAFFNA
A/L - 2K23
கலை, வர்த்தகம், தொழில்நுட்பம்
ஆரம்பம் :- மார்ச் 20
காலை 9 மணிக்கு
077 848 0604

Techno World
தொழில்நுட்பக் கல்லூரி
A/L 2023
தொழினுட்பபிரிவு ஆரம்பம்
14.03.2021 ஞாயிறு காலை 09 மணி
பொறியியல் தொழினுட்பம்
தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்
உயிர்முறைமைகள் தொழினுட்பம்

யாழில் No.1 ஆங்கிலப்பயிற்சி மையம்
O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்
நேரடி வகுப்பு
பிரிவு - I - 15/03/2021 - Mon
பிரிவு - II - 17/3/2021 - Wed
பிரிவு - III - 22/3/2021 - Mon
DIPLOMA IN ENGLISH
SPOKEN ENGLISH
Call now 0777173517
உங்கள் முழுமையான ஆங்கிலப்புலமைக்கு
யாழ்ப்பாணம் Mon,Wed,Fri- 9:00 a.m. Mon,Wed,Fri- 3:00 p.m. Sat,Sun - 2:00 p.m.
நெல்லியடி Tue,Thu - 3:30 p.m. Sat,Sun - 3:30 p.m.
சுன்னாகம் Mon,Wed,Fri- 3 : 00 p.m. Sat,Sun - 3 : 30 p.m.
கிளிநொச்சி Sat,Sun - 9:00 a.m.
சாவகச்சேரி Tue,Thu - 8:00 a.m.
சண்டிலிப்பாய் Mon,Wed,Fri- 1:30 p.m.
DMI , British Council இன் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகும்
IELTS # Unique Test Tips # 40 hrs with free 4Mock exams # Latest course Material ( Book 15)
Student visa மூலம் வெளிநாடு செல்வோருக்கானது
IELTS Life Skills A1
திருமணம் செய்து UK செல்வோருக்கானது
DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் No.113, கன்னாதிட்டி வீதி (சயன்ஸ்ஹோல் அருகாமை) 021 222 4403
நெல்லியடி 021 226 2470
சாவகச்சேரி 021 227 0775
சுன்னாகம் 021 224 1970
சீரணிச்சந்தி சண்டிலிப்பாய் 021 225 6665
கிளிநொச்சி 021 228 5655

சங்கானையில் நாளை முதல் உதயமாகின்றது
NFLASH SUPER DETTERGENT
IS நிறுவனத்தின் முகவர் நிறுவனம்
Hi Clean Brand உள்ளூர் தயாரிப்புக்களான பாடசாலைகளுக்குரிய தொற்றுநீக்கி திரவங்கள், சுகாதார மேம்பாட்டு உபகரணங்கள் மற்றும் சுத்திகரிப்புப் பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் விசேட விலைகளில் பெற்றுக் கொள்ளலாம்.



தொடர்புகளுக்கு -
இல 4/1, சங்கானை சந்தைமேல்மாடி, பிரதானவீதி, சங்கானை.
077 513 4348
0771267562
NFlash Super Detergent
607A K.K.S. Road, Jaffna.
021 222 2855

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு – இந்தியத் தூதுவர் பேச்சு தொடர்பில் தமிழ் ஊடகம் ஒன்றில் வந்த செய்தியும் அப்படித்தான். அப்படி ஒரு குழப்பத்தை அந்த ஊடகம் ஆரம்பித்து வைத்தமையினால் தான் உண்மையைத் அறியும் வாய்ப்புக் கிட்டியது.

அந்தச் சந்திப்புத் தொடர்பில் அந்த ஊடகம் இரண்டு தகவல்களை வெளியிட்டிருந்தது.

ஒன்று – இந்தச் சந்திப்பில் கூட்டமைப்பு எம்.பிக்கள் யாரும் பேசக் கூடாது என்று சந்திப்பிற்கு முன்னதாகவே 'கட்டளை' பிறப்பிக்கப்பட்டிருந்தது. தமிழ் எம்.பிக்களுக்கு அங்கு வடை சாப்பிட மட்டுமே வாய் திறக்க அனுமதி வழங்கப்பட்டது.

அடுத்தது – இந்தச் சந்திப்புக்குச் சென்ற கோப்பாய் பிரதேச சபைத் தலைவர் தியாகராசா நிரோஷ் சந்திப்பில் பங்குபற்ற அனுமதிக்கப்படாமல் திருப்பி அனுப்பட்டார்.

இந்த இரண்டு தகவல்களுமே சரியானவைதான். ஆனால் அவற்றுக்குப் பின்னால் புதைந்து கிடக்கும் உண்மைகள் தெரியப்படுத்தப்படாவிட்டால் இந்தத் தகவல்கள் இப்படியே வேறு அர்த்தத்தைத் தந்து விடும்.

தகவலை வெளியிட்டு கலகத்தை ஏற்படுத்தியாயிற்று. இனி நியாயம் வெளிவர வேண்டுமல்லவா?

இந்தியத் தூதருக்கும், கூட்டமைப்பினருக்கும் இடையிலான இந்தச் சந்திப்பை ஏற்பாடு செய்த தூதரகம் இந்த விவகாரத்தை கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் மூலமே கையாண்டது.

தூதுவர் யாழ் வருகின்றார், யாழ்ப்பாணத்தில் உள்ள கூட்டமைப்பின் இளம் தலைவர்களுடன் உரையாடவும் தூதுவர் விரும்புகின்றார். அதனால் அடுத்த மட்டத் தலைவர்களையும் அழைத்து வாருங்கள் – என்று சுமந்திரனுக்கு வழிகாட்டல் வழங்கப்பட்டது.

அதனால்தான் தமிழரசுத் தலைவர் மாவை சேனாதிராசா மற்றும் யாழ். மாவட்ட எம்.பிக்கள் மூன்று பேருடன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சித் தலைவர்கள் என எட்டுப் பேருமாக பன்னிருவரின் பெயர்கள் சந்திப்புக்குக் கொடுக்கப்பட்டன.

தூதுவர் மன்னாரில் நின்றபோது அவரைச் சந்திக்க முடியாது போயிற்று என்று தெரிவித்து கடைசி நேரத்தில் வன்னி மாவட்ட எம்.பிக்கள் சாள்ஸ் நிமலநாதன், செல்வம் அடைக்கலநாதன் என இருவரின் பெயரும் சேர்க்கப்பட்டு பதினான்கு பேரின் பட்டியல் இறுதி செய்யப்பட்டது.

சந்திப்புக்கு தனது மகனுடன் வந்த தமிழரசுத் தலைவர் மாவை சேனாதிராசா தமது மகனை வெளியே தமது வாகனத்தில் இருந்தி விட்டே வந்தார்.

ஆனால் சந்திப்புக்கு முன் பெயர் பதியாமல் தம்முடன் பிரதேச சபைத் தவிசாளர் நிரோஷை அவரது ரெலோ கட்சித் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தம்முடன் கூட்டி வந்தமையே கணக்கெடுப்பில் குழப்பத்தை ஏற்படுத்தியது. சந்திப்பில் பங்குபற்றும் கூட்டமைப்பினர் என பதினான்கு பேரின் பெயர்கள் பதிவு செய்யப்பட்டிருக்க அங்கு பதினைந்து பேர் அமர்ந்திருந்தமையால் சந்திப்பு ஏற்பாட்டாளர்கள் பட்டியலை சரிபார்த்து நிரோஷை கௌரவமான முறையில் அழைத்துப் பேசி அனுப்பி வைத்தனர்.

அடுத்து வடை சாப்பிட மட்டும் எம்.பிக்கள் வாய் திறக்க அனுமதிக்கப்பட்டனர் என்ற நையாண்டி பற்றிய விடயம். அங்கு வடையே நேற்று விநியோகிக்கப்படவில்லை. தேநீரும் லெமன்பவ் பிஸ்கெட்டுமே உபசரிப்புக்கு வழங்கப்பட்டன.

எம்.பிக்கள் யாருக்கும் வாய் திறக்கக் கூடாது என முற்கூட்டியே உத்தரவிடப்படவில்லை.

நம் மத்தியில் சில அரசியல் தலைவர்களுக்கு 'மைக் என்றால் மைசூர்பாகு மாதிரி' என்பது நமக்குத் தெரிந்த கதை தான். 'மைக்' கிடைத்து விட்டால் என்ன மேடை, யார் முன்னால் இருக்கின்றார்கள் என்று தெரியாமல், புரியாமல், மணிக்கணக்காக சம்பந்த சம்பந்தமேயில்லாமல் உளறித் தள்ளுவார்கள். மயங்கி விழும் வரை கூட இத்தகைய முழக்கம் தொடருவதுண்டு பேச அழைத்தவர்கள் நிறுத்தச் செய்ய முடியாது திண்டாடுவர்.

அப்படியானவர்களும் கூட்டத்தில் இருந்து கொண்டு, கூட்டம் தொடங்கியதுமே தமது கைவரிசையைக் காட்ட ஆரம்பித்து விட்டனர். ஆரம்பமே, அரைமணித் தியாலக் கூட்டம் ஆறு மணி நேரம் சென்றாலும் முடியாது போய்விடுமோ என்ற அச்ச நிலையைத் தந்தது.

கூட்டமைப்பு சார்பில் இந்தப் பேச்சுக்கான ஒழுங்குபடுத்தலை மேற்கொண்ட சுமந்திரன் பார்த்தார், ஆரம்பத்திலேயே குறுக்கிட்டார்.

*"நாங்கள் எம்.பிக்களும், மூத்த தலைவர்களும் கொழும்பில் எந்தச் சமயத்திலும் இந்தியத் தூதுவரைச் சந்திப்பவர்கள். சந்தித்துப் பேசக் கூடியவர்கள். பேசுபவர்கள். எங்களின் இளம் தலைவர்கள் இங்கு இருப்பவர்கள். அவர்களை சந்தித்து, நேரில் பேசி, கருத்துக்களைக் கேட்பதற்காகவே தூதுவர் அங்கிருந்து வந்துள்ளார். ஆகவே அதற்கு – இளம் தலைவர்களுக்கு – இடமளித்து நாம் கொஞ்சம் மௌனம் சாதிப்போமா?"* – என்று சுய கட்டளை பிறப்பித்து மைக் என்றால் 'மைசூர்பாகு' எனத் துடிக்கும் நமது தலைவர்களை அடக்கினார் சுமந்திரன்.

இவ்வளவுதான் நடந்தது. நேற்றைய நாற்பதியைந்து நிமிடக் கூட்டம் விளங்காமல் பேசும் ஒருவரின் விவஸ்தை கெட்ட அளப்பாக முடியாமல், அர்த்தபுஷ்டியாக நடப்பதற்காக போடப்பட்ட கடிவாளம்தான் அது. வடை சாப்பிட மட்டும் வாயைத் திறக்க வழங்கப்பட்ட அனுமதி அல்ல. வாசர்களுக்குப் புரிந்தால் சரி.

மறுபுறத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் தலைமையில் ஆறு கட்சிகள் இந்தியத் தூதுவரைச் சந்தித்த பேச்சு கனகச்சிதமாக நடந்தேறியது.

விக்னேஸ்வரன், சிவநாதன், தமிழ் தேசியக் கட்சி சார்பில் என்.ஸ்ரீகாந்தா, சிவாஜிலிங்கம், ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன், சுயாட்சிக் கழகம் சார்பில் அனந்தி சசிதரன், தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் சார்பில் பொ. ஐங்கரநேசன், ஜனநாயகப் போராளிகள் கட்சி சார்பில் கதிர் என ஆறு கட்சிகளைச் சேர்ந்தோர் ஒன்றாகத் தூதுவரைச் சந்தித்தனர்.

இந்த ஆறு கட்சிகளும் ஒரு கூட்டணி அல்ல. ஒன்றாக இயங்குபவர்களும் அல்லர். எனினும் நேற்று இந்தச் சந்திப்புக்கு முன்னர் நீதியரசர் விக்னேஸ்வரன் வீட்டில் ஒன்று கூடி ஆராய்ந்தனர். ஒவ்வொருவரும் தங்களை அறிமுகப்படுத்தும் போது மட்டும் ஒரு சில கருத்துக்களை சுருக்கமாகக் கூறுவது, மற்றும்படி எல்லோர் சார்பிலும் நீதியரசர் விக்னேஸ்வரன் எம்.பியே பேசுவது என்று தீர்மானம் எடுத்து வந்தனர். அதன்படி அளந்து பேசி, கலைந்து சென்றனர்.

ஈ.பி.டி.பி. சார்பில் வன்னி மாவட்ட எம்.பியான திலீபன் வந்து தூதுவரைச் சந்தித்துச் சென்றார்.

சுதந்திரக் கட்சியின் சார்பில் தூதுவரைச் சந்திக்க அங்கஜன் இராமநாதன் அழைக்கப்பட்டிருந்தார். ஆனால் சந்திப்புக்கு நேரம் இல்லை என அவர் தரப்பில் பதிலளிக்கப்பட்டமையால் சந்திப்பு நடக்கவில்லை.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் கஜேந்திரகுமார், கஜேந்திரன் ஆகிய இரண்டு எம்.பிக்களே பங்கு பற்றினர். சட்டத்தரணி சுகாஷ் பங்குபற்றாமை பலரின தும் புருவங்களை உயர்த்த வைத்தது.

எது, எப்படியோ, இந்தியத் தூதுவரின் இரண்டு நாள் யாழ். 'விசிட்' ஓர் அரசியல் சலசலப்பை உருவாக்கத் தவறவில்லை என்பது மட்டும் உண்மை.

– மின்னல் –

## ஜெனிவாவில் இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 47 நாடுகளில் இருபது நாடுகளின் ஆதரவை இலங்கைக்கு எதிரான பிரேரணை மீது திரட்டியுள்ள பிரிட்டன், ஜேர்மனி, கனடா, மொன்றிநீக்காரோ, மஸிடோனியா ஆகிய அனுசரணை நாடுகள், குறைந்தது இன்னும் நான்கு நாடுகளின் ஆதரவை உறுதிப்படுத்துவதில் தீவிரமாக இருக்கின்றன என்றும் கூறப்பட்டது.

அங்கத்துவ நாடுகளில் அரைவாசிக்கும் மேற்பட்டவற்றின் (24 நாடுகள்) ஆதரவுடன் வாக்கெடுப்புக்குச் செல்வதே தங்களுக்குப் பலமானது – வலுவானது – என இந்தப் பிரேரணையின் அனுசரணை நாடுகள் கருதுகின்றன.

பிரேரணை மீதான வாக்கெடுப்புக்கு இன்னும் எட்டு நாள்கள் இருப்பதனால் அந்த நான்கு நாடுகளின் ஆதரவைக் கூட எட்டிவிடலாம் என அனுசரணை நாடுகள் தரப்பில் கூறப்படுகின்றது.

தமக்கு பத்து நாடுகளின் ஆதரவு இருப்பதாக இலங்கை கூறினாலும் அது வாக்கெடுப்பு சமயத்தில் எட்டு அல்லது ஒன்பதாகக் குறைந்து விடும் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த வாக்கெடுப்பில் பல நாடுகள் பங்கெடுக்காமல் நடுநிலைமை வகிக்கக் கூடும் என்பதால் இப்போது தமக்குக் கிடைத்துள்ள இருபது நாடுகளின் ஆதரவுடனேயே பிரேரணையை தீர்மானமாக – வெற்றிகரமாக – அனுசரணை நாடுகள் நிறைவேற்றிக் கொள்ளும் என்றும் கூறப்பட்டது.

இதற்கிடையில் –

இந்தப் பிரேரணையை எதிர்த்து வாக்களித்து, தங்களுக்கு ஆதரவு நல்கும்படி அங்கத்துவ நாடுகளின் தலைவர்களை இலங்கை நேரடியாகத் தொடர்பு கொண்டு கோரி வருகின்றது.

இந்த வகையில் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியுடன் இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு ஆதரவு கோரினார்.

வேறும் சில நாட்டுத் தலைவர்களுடனும் அவர் பேசினார் என்று கூறப்பட்டது.

ஏனைய நாடுகளின் தலைவர்களுடன் இலங்கை வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தொடர்பு கொண்டு ஆதரவு கோரி வருகின்றார் எனவும் கூறப்பட்டது. (உ)

## இலங்கையின் தேசியக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வர்த்தக நிறுவனமொன்று தனது இணையதளத்தில் விளம்பரப்படுத்தியமையால் ஏற்பட்ட சர்ச்சையைத் தொடர்ந்தே சீனா இவ்வாறு தெரிவித்துள்ளது.

சீனாவைத் தளமாகக் கொண்ட நிறுவனம் ஒன்றால் குறித்த இணையத்தளத்தில் இந்தப் பொருள்கள் விளம்பரப்படுத்தப்பட்டன என்று தகவல் வெளியாகியது.

இதையடுத்து குறித்த சீன நிறுவனத்தைத் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு இலங்கையின் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கலாநிதி ஜயனாத் கொலம்பகே சீனத் தூதரகத்துக்கு அறிவித்திருந்தார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள சீனத் தூதரகம், இலங்கை தேசியக் கொடியைப் பொருத்தமற்ற முறையில் விளம்பரப்படுத்தப்பட்டமை குறித்து தாம் கவலை அடைவதாகக் கூறியுள்ளது.

இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும்படி சீன அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளதாகவும் தூதரகம் தெரிவித்துள்ளது.

## விமலுக்கு எதிராக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காரணிகள் தொடர்பில் கலந்துரையாடி வருகின்றமையுடன், பிரேரணையில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் குறித்தும் அவதானம் செலுத்தியுள்ளனர் எனவும் தெரியவருகின்றது.

அமைச்சர் விமல் வீரசன்ஸவுக்கு எதிராக அரசுக்குள்ளேயே எதிர்ப்புகள் வலுத்து வருகின்றன. குறிப்பாக ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி உறுப்பினர்கள் போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

பஸில் ராஜபக்ஷவுக்கு மிகவும் நெருக்கமான 43 எம்.பிக்கள், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை நேரில் சந்தித்து விமலுக்கு எதிரான முறைப்பாடுகளை முன்வைத்துள்ளனர். விமலால் ஆற்றப்பட்டுள்ள சில உரைகளையும் காணொலி வடிவில் பிரதமரிடம் சமர்ப்பித்துள்ளனர்.

இவ்வாறானதொரு பின்புலத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றை முன்வைத்தால் அது அரசுக்கு சவாலாக அமையும் என வும், மொட்டுக் கட்சி உறுப்பினர்கள்கூட ஆதரவு வழங்கக்கூடும் எனவும் எதிரணி உறுப்பினர்கள் சிலர் கருதுகின்றனர். அதேபோல் அரசின் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்தைக்கூட ஆட்டம் காண வைக்கமுடியும் எனவும் கருதுகின்றனர்.

எனினும், நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றை முன்வைத்தால் பிளவு பட்டிருக்கும் அரச கூட்டணி மீண்டும் ஐக் கியமாகக் கூடும் என்ற கோணத்திலும் சிலர் கருத்துகளை முன்வைத்துள்ளனர்.

எனவே, ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்றக்குழுக் கூட்டத்தில் கலந்துரையாடிய பின்னரே இது விடயம் தொடர்பில் இறுதி முடிவொன்று எடுக்கப்படக்கூடும் எனத் தெரியவருகின்றது.

## பயங்கரவாதத் தடைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொடர்பாக கைதுசெய்யப்படும் சந்தேக நபரை 24 மணித்தியாலங்களுக்குள் அண்மையில் உள்ள பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்க வேண்டும்.

அதனைத் தொடர்ந்து அந்த நபர் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு முன் அந்த விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருக்கும், பொலிஸ்மா அதிபருக்கும் அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.

குறித்த சந்தேகநபர் தீவிரவாத அடிப்படைவாத மற்றும் தீவிரவாத நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டிருப்பது உறுதி செய்யப்பட்டால் அது தொடர்பில் சட்டமா அதிபருக்கு அறிவுறுத்த வேண்டும்.

இதன்படி, அந்த நபரை புனர்வாழ்வளிப்பதற்கு சட்டமா அதிபர் தீர்மானித்தால் அந்த உத்தரவுக்கான எழுத்து மூலமான ஆவணத்துடன் சந்தேகநபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டும்.

இதன்போது நீதிவானால் சந்தேக நபரை ஒரு வருடத்துக்கு உட்பட்ட காலத்துக்கு புனர்வாழ்வளிக்க உத்தரவு பிறப்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சந்தேகநபரின் குற்றத்துக்கான வழக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும் எனவும் குறித்த வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வடக்கில் மேலும் ஏழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூடத்தில் 485 பேரின் மாதிரிகள் நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

அதில், யாழ்.மாவட்டத்தில் நான்கு பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் இருவரும், மன்னார் மாவட்டத்தில் ஒருவரும் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவரும், சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்கள் இருவரும் ஏற்கனவே தொற்றாளர்களுடன் தொடர்புடையவர்கள் எனவும், சுயதனிமைக்கு உட்படுத்தப்பட்டவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், யாழ். போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட இருவருக்கும் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவர்களில் ஒருவர் தனிமைப்படுத்தல் நிலையத்தைச் சேர்ந்தவர் என்பதுடன் மற்றையவர் கொரோனாத் தொற்று அறிகுறிகளுடன் சேர்க்கப்பட்டிருந்தவராவார்.

இதேவேளை, புதுக்குடியிருப்பு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் இருவர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்கள் இருவரும் கிளிநொச்சி ஆடைத்தொழிற்சாலையில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட பணியாளருடன் தொடர்புடைய, தனிமைப்படுத்தலில் இருந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கும் கொரோனாத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது – என்றார்.

வீட்டுடன் காணி தேவை

இணுவில் கந்தசாமி கோவில், பரராஜசேகர பிள்ளையார் கோவில் சூழலில் இரண்டு பரப்புக்குள் காணி அல்லது வீட்டுடன் காணி தேவை.

தொடர்பு:-0779690990

# முஸ்லிம்களை வேண்டுமென்றே பழிவாங்குகின்றது கோட்டா அரசு

## ரிஷாத் எம்.பி.கடும் சீற்றம்



முஸ்லிம் சமூகத்தை வேண்டுமென்றே பழிவாங்கும் வகையில் இந்த அரசு செயற்படுகின்றது. அதிலும்,குறிப்பாக அமைச்சரவையிலுள்ள விமல் வீரவன்ஸ, மஹிந்தானந்த அளுத்கமகே ஆகியோர் தங்கள் இன வெறி, மத வெறி பிரசாரங்களை பகிரங்கமாகவே மேற்கொண்டு வருகின்றனர். இதற்கு எதிராக சட்ட நடவடிக்கையை நாடியுள்ளேன்.

– இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு மேலும் தெரிவிக்கையில் –

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் உண்மையான குற்றவாளிகள் யாராக இருந்தாலும் அவர்கள் அனைவரும் தண்டிக்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

ஆனால், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் இடம்பெற்றது முதல் என் மீதும், என் சமூகத்தின் மீதும் இல்லாத, பொல்லாத குற்றச்சாட்டுக்களை அரசிலுள்ள சிலர் சுமத்தி வருகின்றனர். அதில் அமைச்சர்களான விமல் வீரவன்ச, மஹிந்தானந்த அளுத்கமே ஆகியோரின் உளறல்கள் உச்சத்தில் உள்ளன.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் பின்னர் 2 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் கைது செய்யப்பட்டனர். அதில் 250 இற்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் மட்டும் தற்போது சிறைகளில் இருக்கின்றார்கள். ஏனையோர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

என்னையும் பல தடவைகள் அழைத்து விசாரணை செய்து சிறையில் அடைக்க முயன்றனர். ஆனால், குற்றச்சாட்டுக்கள் எதுவும் நிரூபிக்க முடியாத சந்தர்ப்பத்தில் என்னை விடுவித்தனர்.

தேவையில்லாமல் என்னைச் சீண்டிப் பார்க்கும் அமைச்சர் விமலுக்கு எதிராக சி.ஐ.டியில் முறைப்பாடு செய்துள்ளேன். அடுத்த வாரம் அவருக்கு எதிராக மேலதிக சட்ட நடவடிக்கையையும் நாடவுள்ளேன்.

முஸ்லிம் சமூகத்தை இந்த அரசு தொடர்ந்து அடக்க முயன்றால் அதன் விபரீதங்கள் ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச மட்டத்தில் உச்சத்தில் இருக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிவைக்க விரும்புகின்றேன் – என்றார்.

## தமிழர்களின் தேசத்தை அங்கீகரிக்கும் தீர்வை தொடர்ந்து வலியுறுத்துவோம்!

### கஜேந்திரகுமார் ஆணித்தரம்

தமிழர் தேசத்தை அங்கீகரிக்கும் தீர்வை தொடர்ந்தும் வலியுறுத்துவோம் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.



இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவுடனான சந்திப்பின்போது, இனப் படுகொலைக்கான பொறுப்புக்கூறலை வலியுறுத்துவதில் இந்தியா காத்திரமான பங்கை வகிக்க வேண்டும் என எடுத்து கூறியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியப் பாதுகாப்பு நலன்களுக்குத் தமிழர் தேசம் ஒரு கவசமாகவே இருக்கும் என்றும் நாம் இந்திய நலன்களுக்கு எதிரானவர்கள் அல்லர் என்றும் இதன் போது சுட்டிக்காட்டினார் எனக் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

அத்தோடு பூகோள அரசியல் போட்டியின் பகடைகளாக இலங்கையின் வடக்கு, கிழக்கு பகுதியை இந்தியாவுக்கு எதிரான சக்திகளுக்கு வழங்குவதை தாம் எதிர்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் அனைவரும் உடற்கல்வி பட்டப்படிப்பைத் தொடர முடியும்

### ஆவன செய்ய துணைவேந்தர் உறுதி தெரிவிப்பு

யாழ். பல்கலைக்கழகத்தில் உடற்கல்வி பட்டப்படிப்பினை ஆரம்பிக்கலாம் என மானியங்கள் ஆணைக்குழு பரிந்துரை வழங்கி அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதற்கு முக்கிய பங்காற்றிய யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜாவை அவரது அலுவலகத்தில் நேரில் சென்று வாழ்த்து தெரிவித்த உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கத் தலைவர் ப.தர்மகுமாரனிடம் வெகு விரைவில் உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் அனைவரும் பட்டதாரிகளாக மாறுவதற்கு ஆவன செய்வேன் என உறுதிபடத் தெரிவித்தார் துணைவேந்தர்.

யாழ். பல்கலைக்கழகத்தில் முதல் முறையாக 1998 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட உடற்கல்வி டிப்ளோமா கற்கைநெறி 2021 ஆம் ஆண்டே பட்டப்படிப்பாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. இதற்காக 23 வருடங்கள் காத்திருக்க வேண்டிய சூழல் ஏற்பட்டமை விசனத்துக்குரியது.

இருந்தபோதும் துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜாவின் தற்துணிவும், விடா முயற்சியும், விளையாட்டின் மூலம் சமூகத்தை மேம்படுத்த முடியும் என்ற நம்பிக்கையுமே உடற்கல்வியை பட்டப்படிப்பாக தரம் உயர்த்தியுள்ளது.

எனினும் இதுவரை யாழ். பல்கலைக்கழகத்தில் உடற்கல்வி டிப்ளோமா கற்கைநெறியைப் பூர்த்தி செய்தவர்கள் அதன் அடிப்படையில் உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் விளையாட்டு அதிகாரிகள் நியமனங்களைப் பெற்று பணிபுரிகின்றனர்.

இப்போது 2020 ஆம் ஆண்டு உயர்தர பரீட்சை எழுதிய மாணவர்கள் இசற் ஸ்கோரின் அடிப்படையில் இக்கற்கை நெறிக்கு உள்வாங்கப்படுவார்கள். ஆனால் உடற்கல்வி டிப்ளோமா பட்டம் பெற்ற 10 அணிகளுக்கு மேற்பட்டவர்கள் பட்டப்படிப்பிற்காக காத்திருக்கின்றார்கள் என சங்கத் தலைவர் ப.தர்மகுமாரனினால் சுட்டிக்காட்டப்பட்ட போது இது யாழ். பல்கலைக்கழக நிர்வாக கட்டமைப்புக்குள் தீர்க்கப்படுகின்ற விடயம். மிகவும் கஷ்டமான விவகாரத்தையே தீர்த்து நடைமுறைக்கு கொண்டு வந்து விட்டோம் எனக் கூறியவர், மிகவும் வளர்க்கப்பட வேண்டிய விளையாட்டுத்துறைக்காக விரைவில் உடற்கல்வி டிப்ளோமாதாரிகளை பட்டதாரிகளாக மாற்றுவேன் என சங்கத் தலைவரிடம் உறுதிபடத் தெரிவித்தார்.

## வாகன இறக்குமதி குறித்து விசேட வேலைத்திட்டங்கள்

வாகனங்களை இறக்குமதி செய்வதற்காக விசேட வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கவுள்ளதாக திறைசேரியின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகல தெரிவித்திருக்கிறார். கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே திறைசேரியின் செயலாளர் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

இறக்குமதி செய்யப்படும் வாகனங்களில் தனிப்பட்ட பாவனைக்காக பயன்படுத்தப்படும் வாகனங்களின் இறக்குமதி இடைநிறுத்தப்பட்டுள்ளன. நாட்டின் டொலரின் பெறுமானத்தை சேமிப்பதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இது சம்பந்தமாக வாகன இறக்குமதியாளர்களுடன் பேச்சு நடத்தப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

வாகன இறக்குமதியின் போது நாட்டின் அபிவிருத்திக்கு முதலிடம் வழங்கும் வகையில் வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டிருப்பதாக திறைசேரியின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகல மேலும் தெரிவித்தார்.

## இலங்கையில் 3 ஆவது கொரோனா அலை ஆபத்து: பொதுச் சுகாதார ஆய்வாளர்கள் சங்கம் எச்சரிக்கை!

இலங்கையில் பண்டிகைக் காலங்களில் 3 ஆவது கொரோனா அலைக்கான ஆபத்து ஏற்பட்டுள்ளது என பொதுச் சுகாதார ஆய்வாளர்கள் சங்கத் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.

எனவே, எதிர்வரும் பண்டிகைக் காலங்களில் கொரோனா வைரஸ் தொற்றுநோயிலிருந்து மக்களைக் காப்பாற்றும் பொருட்டு அரசாங்கம் தகுந்த கொள்கை தொடர்பான தீர்மானங்களை எடுக்க வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

அவ்வாறில்லையெனில், 3 ஆவது கொரோனா அலைக்கான ஆபத்தை எதிர்நோக்க வேண்டி வருமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பண்டிகைக் காலங்களில் இது தொடர்பாகப் பொதுமக்கள் விழிப்புடன் செயலாற்ற வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

அதேநேரம், இயன்றவரை தங்களது பயணங்களை மட்டுப்படுத்த வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## 7 லட்சத்து 60 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு இதுவரை கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டது!

இலங்கையில் ஒக்ஸ்போர்ட் – அஸ்ட்ரா ஜெனெகா கொவிஷீல்ட் தடுப்பூசிகளைப் பெற்றவர்களின் மொத்த எண்ணிக்கை 7 லட்சத்து 60 ஆயிரத்து 765 ஆக உயர்ந்துள்ளது.

புதிதாக 1,217 பேர் ஒக்ஸ்போர்ட் – அஸ்ட்ரா ஜெனெகா தடுப்பூசியை கடந்த (வெள்ளிக் கிழமை) பெற்றுக்கொண்டதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது. இந்தியாவில் இருந்து 5 லட்சம் தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றமையை அடுத்து இலங்கையில் இந்த வருடம் ஜனவரி மாதம் 29 ஆம் திகதி முதல் கொரோனா தடுப்பூசி செலுத்தும் பணி ஆரம்பமா கியது.


## காணி விற்பனைக்கு

நொத்தாரிஸ் தோட்டம் கரணவாய் மேற்கில் அமைந்துள்ள நி.பர 21 விஸ்தீரணம் கொண்டதும், ஈரப்பலா மரங்களும், 100 தென்னம்பிள்ளைகளும், எக்காலமும் நீர்வற்றாத வெட்டுக் கிணறும் வேறு கிணற்றில் 4 அடி வழிவாய்க்காலும், ஒருநாள் தண்ணீர் பங்கும், நான்கு பக்கமும் கொங்கிறீட் தூண் நிறுவப்பட்டு முட்கம்பியால் அடைக்கப்பட்ட வேலியுடன் கூடிய தோட்டக்காணி விற்பனைக்கு உண்டு. (நீதிமன்றால் பிரிவிடல் செய்யப்பட்ட உறுதி நாலு இஞ்சி வாட்டப்பம் புதிதாக போடப்பட்டது. பருத்தித்துறை யாழ்ப்பாண வீதிக்கு 1/4 மைல் தூரத்தில் உள்ளது.

**நேரில் தொடர்பு கொள்ளவும்**

வே.தம்பிப்பிள்ளை,
**'சிறிபதி இல்லம்',**
இலகடி அல்வாய் கிழக்கு,
அல்வாய்

**076 332 1357**


## தவக்காலச் சிந்தனை

# எதை என் நினைவாக செய்தீர்கள்?



கலாபூஷணம் செ.யோசப்பாலா

எல்லோரும் ஆன்மீக தேடல் உள்ளவராக மத வழிபாடுகளில் ஈடுபட்டே வருகிறோம். அவ் வழிபாட்டை வாழ்வாக்கும் போது எமது தேவைகளை இறைவனிடம் வேண்டிக் கொள்வோம். இவ் வேண்டுதல்கள் நிறைவேற்ற ஒறுத்தல், உபவாசம், உண்ணாநோன்பு, விரதம் என்ற பொருளோடும் ஆலய தரிசனங்கள் நேர்த்தி வேண்டுதல் என தொடரான வேண்டுதல் எல்லா சமயத்தவரும் தமது வேண்டுதலை இறைவனிடத்தில் உடன்படிக்கை வைத்து உறவாடி நிறைவேற்றி வருகிறோம்.

இறைவன் மகிழ்ச்சியடைய தானதர்ம உதவிகள் செய்து வரும் போது உங்கள் வேண்டுதல் பலிக்க 'இதை நினைவாக செய்யுங்கள்' என இயேசு தன் இராப்போசன விருந்தில் அப்பத்தை பிட்டு பகிரும் ஓர் அடையாளத்தையே வழிபாட்டில் தினமும் முன்னுதாரணமாகத் தந்தார் என்பதை நினைவூட்டி வழிபாட்டில் பங்கேற்கிறோம். அதை வார்த்தையோடு மட்டும் உச்சரித்து விட்டு வாழ்வில் பிறரிடம் எதிர்பார்த்து ஏங்கும் மனங்களாக உள்ளோமா என மீட்டுப்பார்க்க எமது வழிபாட்டை வாழ்வாக்க எதை செய்தோம்? எதை எம் நினைவாக செய்கிறோம்?

இது தவக்காலத்தில் எம் உள்ளே நாம் கேட்கும் கேள்வியாகவும் அதற்கு ஏற்ற செயல்களாகவும் மாறும் காலமே தவக்காலத்தின் புனித நாள்களாகும். எம்மில் பல தம்பட்டம் அடித்து விரதம் இருக்கின்றோம். வழிபாடுகளுக்கு செல்கின்றோம். பிறக்கு தெரியவே பிரசாரப்படுத்தி பெருமை அடைய முயல்கின்றோமா? அல்லது மறைவாக வழிபாட்டிலும் வாழ்விலும் என்ன என் நினைவாக செய்கின்றோம் என்பதனை உணர்ந்து செய்யும் செயல்களால் இறை உறவில் சங்கமிப்போமா?

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மோடி - கோட்டா பேச்சு

'வீடெரிக்கின்ற இராஜாவுக்குக் கொள்ளி கொடுக்கின்ற மந்திரிகள்' இருந்தால் நாடு உருப்பட்ட மாதிரித்தான். அந்த நிலைமை தான் இலங்கையிலும். ராஜபக்ஷக்களின் ஆட்சி அப்படித்தான் போகின்றது.

உலகச் செல்நெறி புரியாமல் – யதார்த்த நிலைமை தெரியாமல் – பௌத்த, சிங்கள இனவெறிப் போக்கில் மட்டும் ஆவேசமாகப் பிளிறிக் கொண்டு நிற்கும் கோட்டா அரசு அதன் விளைவை எதிர்கொள்ளும் காலம் தொடங்கி விட்டது.

சர்வதேச நாடுகளினால் 'தோற்றுப் போன தேசமாக' அடையாளப்படுத்தப்படும் இழிநிலைக்கு நாடு வந்திருப்பது கண்கூடு.

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை எதிர்நோக்கும் நெருக்கடியின் ஆழம் – அழுத்தம் – நாள்கள் கிட்டக் கிட்டத்தான் கொழும்புக்குப் புரிய ஆரம்பித்திருக்கின்றது.

சரத் வீரசேகராக்களினதும், கமல் குணரத்னக்களினதும் பௌத்த, சிங்கள தீவிர வெறிப் போக்கில் பயணித்த கொழும்பு அரசு, அதனால் சர்வதேசத்தின் நேரடி நெருக்குவாரத்தை இப்போது எதிர்கொள்ளப் போகின்றது.

ஜெனிவாவில் என்ன தீர்மானத்தை நிறைவேற்றினாலும் – என்ன முடிவை எடுத்தாலும் – எமக்குக் கவலையில்லை, நாம் அது குறித்து அலட்டிக் கொள்ளப் போவதில்லை என்று தென்னிலங்கை சிங்கள அரசு விட்டேத்தியாகப் பேசலாம். ஆனால் கள நிலைமை அப்படியல்ல.

உலகின் பெரும்பாலான நாடுகள் ஒன்று கூடி மனித உரிமைகளைப் பேணாத நாடு என்ற சான்றிதழை வேறு வார்த்தைகளில் – வாசகங்களில் – முத்திரை குத்தித் தரப்போகின்றன. அதன் விளைவுகளும் வெறும் சர்வதேச அரங்கில் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானம் என்ற மட்டத்துடன் அடங்கி விடப்போவதில்லை. தொடர் விளைவுகள் விபரீதங்களாகக் கூட அமையலாம்.

இலங்கைக்கு எதிரான பிரேரணையை நிறைவேற்றியே தீர வேண்டும் என்று கங்கணம் கட்டி நிற்கும் மேற்குலக நாடுகள், இலங்கை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இம்முறை பகிரங்கமாக முன்வைத்த பரிந்துரைப்படி, இலங்கையில் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்களில் ஈடுபட்டவர்கள் என அடையாளம் காணப்பட்டவர்களுக்கு எதிராகத் தத்தமது நாடுகளில் பயணத் தடை, சொத்து முடக்கம், குற்ற விசாரணை போன்றவற்றை ஆரம்பிக்கக் கூடிய ஆபத்தும் உண்டு.

இந்தப் பின்புலத்தில்தான் – ஜெனிவா நெருக்கடிச் சுருக்கு கழுத்தில் விழுந்துள்ள இக்கட்டில் – இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் தொலைபேசியில் பேசியிருக்கின்றார் இலங்கை ஜனாதிபதி கோட்டாய ராஜபக்ஷ.

***"இரண்டு நாடுகளுக்கும் இடையில் இரு தரப்புகள் மற்றும் பல தரப்புகள் சம்பந்தப்பட்ட அரங்குகளில் தற்போது பேணும் ஒத்துழைப்பு உட்பட பல தரப்பட்ட விடயங்களை இரு தலைவர்களும் மேலோட்டமாகப் பேசினர்"*** – என்று இந்தத் தொடர்பாடலின் பின்னர் இந்தியப் பிரதமரின் அலுவலகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது ஜெனிவா விவகாரம்தான்.

ஜெனிவா விடயத்தை ஒட்டி, இரு நாடுகளினதும் தலைவர்கள், அதிகாரிகள் தங்களுக்குள் ஏற்கனவே ஊடாட்டத்தைக் கொண்டிருந்தனர். அது இரு தரப்பு ஒத்துழைப்பு சம்பந்தப்பட்ட அரங்கு.

அதேசமயம், ஜெனிவாவில் பல்வேறு நாடுகளுடன் சேர்ந்து இந்த விடயத்தை இலங்கையும், இந்தியாவும் கையாளுகின்றன. அது பல நாடுகள் – பல தரப்புகளின் – ஒத்துழைப்பு சம்பந்தப்பட்ட அரங்கு.

அதையே இந்தியப் பிரதமரின் அலுவலகம் விடுத்த செய்திக் குறிப்பு விளக்குகின்றது.

அதேசமயம், மோடி – கோட்டா தொலைபேசி உரையாடல், இலங்கைக்கு ஜெனிவாச் சுருக்கு கழுத்தை நெருங்கி வரும் சமயம் நடைபெற்றாலும் இன்னொரு கால முக்கியத்துவமும் அதற்கு உண்டு.

அமெரிக்க அதிபர் ஜோ பைடன், ஆஸ்திரேலிய பிரதமர் ஸ்கொட் மொரிஸன், ஜப்பான் பிரதமர் ஜோஹிஹிடே சுகா, இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி ஆகிய நான்முக நாடுகளின் தலைவர்களின் முதலாவது 'குவாட் மாநாடு' (Quad Summit) நேற்று முன்தினம் மெய்நிகர் முறைமையில் நடைபெற்றது. நான்கு நாடுகளின் தலைவர்களும் காணொலியில் ஒருவர் முகத்தை மற்றவர்கள் பார்த்து இந்தோ – பசுபிக் பிராந்திய ஒத்துழைப்புக் குறித்துத் தங்களுக்குள் உரையாடிக் கொண்டனர். அதன் பின்னர் அதிகாரிகள் மட்டத்தில் ஆலோசனைகள் நடைபெற்றன.

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் அரங்கில் இலங்கை தொடர்பான விவகாரத்தில் அமெரிக்காவும், ஆஸ்திரேலியாவும் அதீத ஈடுபாடு காட்டி வரும் சூழலில் அந்த இரு நாடுகளின் தலைவர்களுடனும் இந்தியப் பிரதமர் மெய்நிகர் முறைமையில் நேரடியாக உரையாடிய பின்னர் – அதிகாரிகள் மட்டத்தில் இந்த நாடுகளின் பிரதிநிதிகள் தங்களுக்குள் கலந்துரையாடிய பின்பு – இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷுடன் அடுத்த நாள் இந்தியப் பிரதமர் தொலைபேசியில் உரையாடியிருக்கின்றார்.

இலங்கை தொடர்பான இராஜதந்திர நடவடிக்கை விவகாரத்தில் இந்த உரையாடல் – இன்றைய கட்டத்தில் – மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றது என்பதை மட்டும் உறுதியாகக் கூறலாம்.

# சுகாதார நடைமுறைகளை கடுமையாக பின்பற்றுக!

## யாழ்.மக்களுக்கு அரச அதிபர் கோரிக்கை

கொரோனாப் பரவலின் தற்போதைய அபாயகர நிலையில் பொதுமக்கள் தமது அன்றாட செயற்பாடுகளை கட்டாயமாக சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி முன்னெடுக்க வேண்டுமென யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று (சனிக்கிழமை) இடம்பெற்ற தற்போதைய கொரோனா நிலைமைகள் தொடர்பாக ஆராயும் விசேட கூட்டத்தின் முடிவுகள் பற்றிக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் –

யாழ். மாவட்ட கொரோனா நிலைமை தொடர்பாக ஆராயும் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது. அதனடிப்படையில் சில முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

இந்த வருடத்தின் கடந்த மூன்று மாதங்களில் யாழ்ப்பாண மாவட்டத்தில் கொரோனாத் தொற்று உறுதியானவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றது. கடந்த ஒகஸ்ட் மாதத்தில் இருந்து இதுவரை யாழ்ப்பாணத்தில் 401 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் 204 பேர் பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். அத்துடன், கொரோனாத் தொற்று கண்டறியப்பட்டோருடன் தொடர்புடைய ஆயிரத்து 756 பேர் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

இந்நிலையில், பொதுமக்கள் அவதானமாக்கச் செயற்பட வேண்டும் என்பதுடன் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாதோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, சுகாதார அமைச்சால் வழங்கப்பட்டுள்ள சில அறிவுறுத்தலுக்கமைய யாழ்ப்பாண மாவட்டத்தில் வழிபாட்டுத் தலங்களில் 50 பேர் மட்டும் கலந்து கொள்ள முடியும். அதேபோல், மரண வீடுகளில் 25 பேரும் சமூகக் கூட்டங்களில் 150 பேரை மாத்திரமே அனுமதிப்பது எனவும் திருமண நிகழ்வில் 150 பேராக மட்டுப்படுத்துவதாகவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஏனைய களியாட்ட நிகழ்வுகள் தடைசெய்யப்பட்டுள்ளன. இருந்த போதிலும் விளையாட்டு நிகழ்வுகள், ஏனைய நிகழ்வுகளுக்கு கட்டுப்பாட்டுடன் அனுமதி வழங்கப்படுவதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிகழ்வுகளை நடத்துவதற்கு முன்னர் அந்தப் பகுதி சுகாதார அதிகாரிகளிடம் அனுமதி பெற்று அதனைச் செயற்படுத்த முடியும். அத்தோடு, அவர்களுடைய அறிவுறுத்தலின்படி குறித்த நிகழ்வுகளை முன்னெடுக்க வேண்டும்.

தற்போதைய காலப்பகுதி ஓர் அபாயகரமான காலப்பகுதியாகும். எனவே, பொது மக்கள் பீதி அடையாமல் தமது அன்றாடச் செயற்பாடுகளை சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி செயற்படுத்துவதன் மூலம் யாழ்ப்பாண மாவட்டத்தில் கொரோனாத் தொற்று நிலைமையைக் கட்டுப்படுத்த முடியும். – என அவர் தெரிவித்துள்ளார்.

# வெளிநாட்டவருக்கு தனிமைப்படுத்தல் ஏழு நாள்களாகக் குறைக்கப்படலாம்!

## இராணுவத் தளபதி தெரிவிப்பு



வெளிநாட்டிலிருந்து திரும்பும் இலங்கையர்களின் தனிமைப்படுத்தப்பட்ட காலத்தை 7 ஆக குறைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த கோரிக்கையை இராணுவத் தளபதி சவேந்திர சில்வா, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் விடுத்துள்ளார்.

அத்தோடு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்ட அவர்களை வீட்டிலேயே தனிமைப்படுத்த அனுமதிக்குமாறும் அவர் கோரியுள்ளார்.

அந்தவகையில் குறித்த இரண்டு கோரிக்கைகளும் எதிர்வரும் நாள்களில் அங்கீகரிக்கப்படும் என நம்புவதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா நம்பிக்கை தெரிவித்தார்.

ஹோட்டல்களில் தனிமைப்படுத்தும் போது வெளிநாட்டில் இருந்துவரும் இலங்கையர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தேசியக் கொடி அவமதிப்பு விளம்பரம் நீக்கிய அமசோன்!



இலங்கை தேசியக் கொடியின் உருவத்துடன் கூடிய கால் துடைப்பான் விளம்பரத்தை அமசோன் நிறுவனம் தனது இணையத் தளத்தில் இருந்து நீக்கியுள்ளதாக வெளிநாட்டு அமைச்சு தெரிவித்துள்ளது.


## மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள 076 443 8619 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை – அதிகாலையும் மாலையும் – உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

## ஊடக குருகுலம் விரைவில் ஆரம்பம்...

மூத்த ஊடகவியலாளர் திரு.வித்தியாதரன் மற்றும் காலைக்கதிரின் அனுபவம் மிக்க ஆசிரியர் குழுவின் கீழ் ஊடகத் துறையினை கற்க ஓர் அரிய சந்தர்ப்பம்.
அச்சு ஊடகம், இலத்திரனியல் ஊடகம் ஆகியவற்றை அடிப்படையில் இருந்து கற்றுத் தேர்ந்திட காலைக்கதிரின் ஊடக குருகுலத்தில் இணையுங்கள்.
ஊடகத்துறையில் ஆர்வமுள்ள யாரும் இணைந்து கொள்ளலாம்.
உங்களின் சுயவிவரக் கோவையினை Kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

தொடர்புகளுக்கு:- 076 443 8623

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் அறிக்கை காலங்கடத்தல் அரசுக்கே பாதகமாகும்!



## திஸ்ஸ அத்தநாயக்க எச்சரிக்கை

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பிலான விசாரணைகளை மறைக்க முயற்சித்தாலோ, அல்லது காலங்கடத்த முயற்சித்தாலோ அரசாங்கத்தின் மீதே மக்கள் சந்தேகம் கொள்வார்கள் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் கூறியவை வருமாறு –

உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களுக் கமைய சட்டநடவடிக்கை எடுக்குமாறு பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

எனினும் மக்கள் எதிர்பார்த்த எதுவுமே அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை. இந்த தாக்குதலுடன் தொடர்பு கொண்ட பிரதான சூத்திரதாரி மற்றும் தற்கொலை தாரிகளுக்கு உதவி ஒத்தாசைகளை வழங்கிய நபர்களின் விவரங்கள் தொடர்பில் கூட ஆணைக்குழு எந்தத் தரவுகளையும் சேகரித்திருக்கவில்லை.

இந்நிலையில் இந்த அறிக்கை தொடர்பில் அரசாங்கம் எவ்வாறான நடவடிக்கையை எடுத்துள்ளது. தாக்குதலில் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நியாயத்தைப் பெற்றுக் கொடுக்கவேண்டும் என்றால் , பிரதான சூத்திரதாரிகள் அடையாளம் காணப்பட்டு , அவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட வேண்டும். இதேவேளை இந்தத் தாக்குதல் தொடர்பில் இடம்பெற்றுவரும் நீதிமன்ற விசாரணை களும் உடனே நிறைவுகாண வேண்டும்.

அவ்வாறு எதுவும் இடம்பெறாவிட்டால் அரசாங்கம் வேணும் என்றே அதனைப் புறக்கணித்து வருகின்றது என்றே தோன்றுகின்றது. அதற்கமைய அவ்வாறு புறக்கணிப்பதற்கான காரணம் என்ன? அவ்வாறு புறக் கணித்தால் ஏதோ இரகசியம் அதில் காணப்படுவதாகவே தோன்றுகின்றது.

நல்லாட்சி அரசாங்கத்தில் இந்தத் தாக்குதல் இடம் பெற்றதால், இது தொடர்பான பொறுப்பு இந்த அரசாங் கத்தை சார்ந்திருக்கின்றது.

இந்நிலையில் அவர்களது ஆட்சிக் காலத்தில் தேசிய பாதுகாப்பிற்கு சிக்கல் ஏற்பட்டுள்ளமையும் இதனூடாகத் தெரியவந்துள்ளது.

ஆனால் இந்த தாக்குதல் தொடர்பில் விசாரணை களை முன்னெடுத்து சந்தேக நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதாக அரசாங்கம் வாக்குறுதி வழங் கியுள்ளது.

இந்நிலையில் தொடர்ந்தும் காலங்கடத்தாமல் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இதற்காக அர சாங்கம் சர்வதேச நாடுகளுடனும் உதவிகளைப் பெற்றுக் கொள்ள முடியும். அவ்வாறு இல்லாத சந்தர்ப்பத்திலே மக்களது பார்வை அரசாங்கத்தின் மீது விழுவதைத் தவிர்க்கமுடியாது.

இதேவேளை சீன நிறுவனமொன்று இலங்கை தேசி யக் கொடியை கால் துடைப்பானாக நிர்மானித்து அதனை விற்பனை செய்வதற்காக இணையத்தின் ஊடாக விளம்பரம் செய்துள்ளது.

இது தொடர்பில் அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை என்ன? எந்தவொரு நாட்டினதும் தேசியக் கொடி இவ்வாறு கால் துடைப்பானாக நிர்மானிக்கப்பட்டிருக்க வில்லை.

இந்நிலையில் சீனாவுடனான உறவின் காரண மாக இது தொடர்பில் அமைதியாக இருக்க அரசாங்கம் எண்ணிக் கொண்டுள்ளதா? சீனாவுடன் அதிகமான கடன்களைப் பெற்றுக் கொண்டுள்ளதன் காரணமாக, மேலும் அவ்வாறு கடன்களைப் பெற்றுகொள்ள எண் ணியிருப்பதால் அரசாங்கம் அமைதிகாத்துவருகின்றதா? எவ்வாறாயினும் இந்த விவகாரம் தொடர்பில் அரசாங் கம் அமைதியாக இருக்காமல் உடனே நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். – என்று தெரிவித்தார்.





யாழ். ராகஸ்வரம் கலைமன்றம் மற்றும் இலங்கை பல்சமய கருத்தாடல் நிலையம் மற்றும் கிராம அபிவிருத்தி நிறுவனம் ஆகியவற்றின் ஒன்றிணைவில் கொரோனா விழிப்புணர்வு வீதி நாடகம் புத்தளம், வவுனியா, கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் ஆற்றுகை செய்யப்பட்டு வருகின்றது. சமாதானம், சமூக நல்லிணக்கம், கொரோனா விழிப்புணர்வு ஆகிய கருப்பொருள்களை உள்ளடக்கிய மேற்படி நிகழ்வுகளுக்கு கிராம அபிவிருத்தி நிறுவனம் அனுசரணை வழங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மியன்மாரின் இராணுவ சூழ்ச்சிக்கு எதிராக இலங்கை அழுத்தம் கொடுக்க வேண்டும்!

## ஐ.தே.க. வலியுறுத்தல்

கொழும்பு, மார்ச் 14

மியன்மாரில் ஜனநாயக ஆட்சி ஸ்தாபிக்கப் படுவதற்கான தேவை தொடர்பாக இலங்கை அரசாங்கத்தால், பிம்ஸ்டெக் மாநாட்டில் பங்குபற்ற வுள்ள மியன்மார் பிரதிநிதிகள் குழுவிடம் எடுத்து ரைக்கப்பட வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

அத்தோடு இராணுவத்துக்கும் ஆர்ப்பாட்டக்காரர் களுக்கும் இடையில் அதிகரித்து வரும் வன்முறை, பௌத்தத்தை பின்பற்றும் தேசத்தை பிரதிபலிப் பதாகாது என்றும், மியன்மாரில் இராணுவ வன் முறைகளால் ஜனநாயகம் முடக்கப்படுவதை வன்மை யாகக் கண்டிப்பதாகவும் ஐக்கிய தேசியக் கட்சி குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் ஐ.தே.க. வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

ஜனநாயக ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதி பதி மற்றும் நாடாளுமன்றத்தை மீண்டும் ஆட்சியில் அமர்த்த வேண்டியதன் தேவை தொடர்பாக, பிம்ஸ் டெக் மாநாட்டில் பங்குபற்றவுள்ள மியன்மார் பிரதி நிதிகள் குழுவிடம் எடுத்துரைக்குமாறு இலங்கை அரசாங்கத்திடம் ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுக்கிறது.

இலங்கைக்கும் மியன்மாருக்கும் இடையிலான உறவு 4 நூற்றாண்டுகளாகத் தொடர்வதாகும். இந்த நீண்ட கால உறவைப் பயன்படுத்தி, மியன்மாரில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் வன்முறை களை உடனடியாக நிறுத்துவதற்கும், சட்ட பூர்வ மாகத் தெரிவாகியுள்ள அதிகாரிகள் பதவிகளில் அமர்த்தப்படுவதற்கும் அரசாங்கம் தொடர்ச்சியான அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டும்.

மியன்மார் அரசாங்கத்தின் அதிகாரிகள் கைது செய்யப்பட்டமை இராணுவத்தின் சதியாகும் என ஐக்கிய தேசியக் கட்சி பெப்ரவரி மாதத்திலேயே வெளிப்படுத்தியிருந்தது. இராணுவத்திற்கும் ஆர்ப் பாட்டக்காரர்களுக்கும் இடையில் அதிகரித்து வரும் வன்முறை , பௌத்தத்தை பின்பற்றும் தேசத்தை பிரதிபலிப்பதாகாது. மியன்மாரில் இராணுவ வன் முறைகளால் ஜனநாயகம் முடக்கப்படுவதை ஐக்கிய தேசியக் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது.

இம்முறை பிம்ஸ்டெக் மாநாட்டுக்குத் தலைமை தாங்கும் இலங்கை அரசாங்கம், உறுப்பு நாடுக ளுடன் கொண்டுள்ள தொடர்பின் ஊடாக, மியன் மாரில் ஜனநாயக ஆட்சி ஸ்தாபிக்கப்படுவதற்கு தொடர்ச்சியாக அழுத்தம் பிரயோகிக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி கோருகின்றது.

# வட கனினியத்தின் முதலாவது கலந்துரையாடல்!

யாழ்ப்பாணம், மார்ச் 13

வட கனினியம் கனினிக் கற்கை நிலையத்தின் ஏற்பாட்டில் வடக்கில் கனினி தொடர் பிலான கற்கை நெறிகளினை ஆரம்பிப்பது மற்றும் தொழில் வளர்ச்சி, உற்பத்தி பெருக்கம், வியாபார விருத்தி, பொருளாதார மேம்பாடு தொடர்பிலான கலந்துரையாடல் இன்று 14.03.2021 ஞாயிற்றுக்கிழமை காலை 09 மணியளவில் சூம் செயலியூடாக நிகழ்நிலையில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் துறைசார் வல்லுநர்கள் மற் றும் வடக்கின் வளர்ச்சியில் ஆர்வமுள்ளவர்கள் கலந்து கொண்டு தமது கருத்துக்களை பதிவு செய்யுமாறு ஏற்பாட் டாளர்கள் வேண்டுகின்றனர். மேலதிக விவரங்களை vada. kaniniyam என்ற முகநூல் பக்கம் ஊடாகப் பெற்றுக்கொள்ளலாம்.

# பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பங்களாதேஷுக்கு விஜயம்!



பிரதமர் மஹிந்த ராஜ பக்ஷ, எதிர்வரும் 19 ஆம் திகதி பங்களாதேஷுக்கு விஜயம் செய்யவுள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக் கின்றன.

பங்களாதேஷ் நாட்டின் அழைப்பை ஏற்று அங்கு செல்கின்ற பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, இரண்டு நாள் கள் அங்கு தங்கியிருப்பார் எனவும் கூறப்படுகின்றது.

மேலும் இந்த விஜயத்தின்போது அவர் பங்களாதேஷ் நாட்டின் அரச பிரமுகர்களை சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவிக்கு வந்த பின்னர் மேற் கொள்ளும் இரண்டாவது வெளிநாட்டு உத்தியோகபூர்வ விஜயம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

# குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் அஷாத் சாலிக்கு எதிராக முறைப்பாடு!

கொழும்பு, மார்ச் 14

தேசிய ஒற்றுமை முன்னணியின் தலைவர் அஷாத் சாலிக்கு எதிராக நேற்றும் (சனிக்கிழமை) சிலர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடுகளைப் பதிவு செய்துள்ளனர்.

பௌத்த தகவல் மையத்தின் பணிப்பா ளர் அங்குலுகல்லே சிறி ஜினானந்த தேரர் மற்றும் தேசிய முன்னணியின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினரு மான மொஹமட் முஸம்மில் ஆகியோரே இவ்வாறு தங்கள் முறைப்பாடுகளைப் பதிவு செய்துள்ளனர்.

முஸ்லிம் சட்டம் தொடர்பில் அண்மையில் அஷாத் சாலி தெரிவித்த கருத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரியே இவர்களால் முறைப்பாடு பதிவு செய்யப் பட்டுள்ளது

# வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்களின் உணவு ஒறுப்புப் போராட்டம் தொடர்கிறது!

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்துக்கு முன்பாகத் தொடர்போராட்டத்தில் ஈடுபட்டுவரும் வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்களின் உணவுத் தவிர்ப்புப் போராட்டம் ஆறாவது நாளாக நேற்றும் (சனிக்கிழமை) தொடர்ந்தது.

கடந்த முதலாம் திகதியில் இருந்து போராட்டத்தில் ஈடுபட்டுவந்த வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்கள், தமக்கான தீர்வு வழங்கப்படாத நிலையில் கடந்த எட்டாம் திகதி தொடக்கம் தமது போராட்ட வடிவத்தை உணவுத்தவிர்ப்புப் போராட்டமாக மாற்றி முன்னெடுத்து வருகின்றனர்.

போராட்டம் இடம்பெறுகின்ற இடத்திற்கு ஒரு சில தமிழ் அரசியல் பிரதிநிதிகள் சென்றிருந்த போதும் அரசாங்கத்தை பிரதிநிதித்துவம் செய்கின்ற அரசியல் பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகள் இதுவரை தம்மை வந்து சந்திக்கவில்லை என போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவித்துள்ளனர்.

தமக்கு வழங்கப்பட்ட நிரந்தர நியமனம் இடைநிறுத்தப்பட்ட நிலையில் அதனை மீளப் பெற்றுத் தருமாறு கோரியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

கடந்த 2019 ஆம் ஆண்டு, அப்போதைய ஆளுநர் எடுத்த முயற்சியின் பயனாக வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்களுக்கு சுகாதாரப் பணியாளர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கி வைக்கப்பட்டது.

எனினும், குறித்த நியமனத்தில் முறைகேடு இடம்பெற்றதாகப் பாதிக்கப்பட்ட சுகாதாரத் தொண்டர்கள் போராட்டத்தில் ஈடுபட்டதன் காரணமாக அந்த நியமனங்கள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.



இந்நிலையில், நிரந்தர நியமனக் கடிதம் பெற்ற சுகாதாரப் பணியாளர்கள் 454 பேர், தமக்கு உரிய தீர்வை வழங்குமாறு கோரி தொடர் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

---

Agriculture information

## தினம் ஒரு விவசாயத் தகவல்

### 08.03.2021 தொடக்கம் 12.03.2021 வரையிலான சந்தையில் முக்கிய பயிர்களின் விலை நிலைவரம் ஒரே பார்வையில்!

### தம்புள்ள, Pettah, சந்தையின் விலை நிலைவரம்

08.03.2021 தொடக்கம் 12.03.2021 வரையான காலப்பகுதியில் பெற்றா, தம்புள்ள சந்தைகளில் தேசி, உள்ளூர் சிவப்பு வெங்காயம், பெரிய வெங்காயம், தேங்காய், கோவா, தக்காளி, போஞ்சி, கரட், கத்தரி, பூசணி, பச்சை மிளகாய், பப்பாளி, அன்னாசி போன்ற பயிர்களின் விலைகளில் தளம்பல்நிலை அவதானிக்கப்பட்டது. இதனால் இவை முக்கிய கவனத்துக்குரிய பயிர்களாக இருந்தன.

1) நாவுல, யதவத்தா, நுவரலியா மற்றும் மாத்தளை பகுதிகளிலிருந்து குறைந்த வழங்கல். அல்லது சாதகமான வழங்கல் காரணமாக பெற்றா, தம்புள்ள சந்தைகளில் போஞ்சி விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

2) நுவரலியா, கந்தபோலா, ராகலா பகுதிகளிலிருந்து குறைந்த வழங்கல். அல்லது சாதகமான வழங்கல் காரணமாக பெற்றா, தம்புள்ள சந்தைகளில் கரட்டின் விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

3) யாழ்ப்பாணம், புத்தளம், தம்புள்ளயை அண்டிய பகுதிகள் மற்றும் நொச்சியகம பகுதிகளில் இருந்து குறைந்த வழங்கல் காரணமாக அல்லது சாதகமான வழங்கல் காரணமாக பெற்றா, தம்புள்ள சந்தைகளில் பச்சை மிளகாயின் விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

4) மொனராகல மற்றும் பிபிலி பகுதிகளில் இருந்து சாதகமான வழங்கல். அல்லது குறைந்த வழங்கல் காரணமாக பெற்றா, தம்புள்ள சந்தையில் தேசி விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

5) ராகலா பகுதியில் இருந்து சாதகமான வழங்கல் அல்லது குறைந்த வழங்கல் காரணமாக பெற்றா, தம்புள்ள சந்தைகளில் பூசணிக்காயின் விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

6) கலென்பிந்துநுவேவா பகுதிகளிலிருந்து சாதகமான வழங்கல் அல்லது குறைந்த வழங்கல் காரணமாக தம்புள்ள மற்றும் நரஹன்பிடா சந்தைகளில் கத்தரி விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

7) குலியபிட்டிய, குருநாகல் மற்றும் மெல்சிரிபுரா பகுதிகளில் இருந்து சாதகமான வழங்கல் அல்லது குறைந்த வழங்கல் காரணமாக தம்புள்ள மற்றும் நரஹன்பிடா சந்தைகளில் தேங்காயின் விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

8) நுவரலியா, மாத்தளை மற்றும் சிகிரியா தம்புள்ளயை அண்டிய பகுதிகளில் இருந்து குறைந்த வழங்கல். அல்லது சாதகமான வழங்கல் காரணமாக தம்புள்ள மற்றும் நாரஹன்பிடா சந்தைகளில் தக்காளியின் விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

9) பாகிஸ்தானில் இருந்து குறைந்த மற்றும் உயர்தர வகை பெரிய வெங்காயம் கிடைப்பதால் இறக்குமதி செய்யப்பட்ட பெரிய வெங்காயத்தின் விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

10) தெல்டெனியா பகுதிகளில் இருந்து சாதகமான வழங்கல் அல்லது குறைந்த வழங்கல் காரணமாக தம்புள்ள மற்றும் நரஹன்பிடா சந்தைகளில் உள்ளூர் கோவா விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

11) யாழ்ப்பாணம், வெலிமட பகுதிகளிலிருந்து சாதகமான வழங்கல் அல்லது குறைந்த வழங்கல் காரணமாக தம்புள்ள மற்றும் நரஹன்பிடா சந்தைகளில் உள்ளூர் உருளைக்கிழங்கு விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

#### Pettah சந்தை மொத்த விலைகள்

| | 08.03.2021 | 09.03.2021 | 10.03.2021 | 11.03.2021 | 12.03.2021 |
|---|---|---|---|---|---|
| போஞ்சி | 123 | 130 | 130 | | 140 |
| கேரட் | 125 | 125 | 120 | | 150 |
| கோவா | 110 | 123 | 100 | | 100 |
| தக்காளி | 145 | 145 | 140 | | 100 |
| கத்திரிக்காய் | 45 | 45 | 40 | | 40 |
| பூசணி | 83 | 100 | 100 | | 100 |
| புடலங்காய் | 70 | 70 | 60 | | 60 |
| பச்சை மிளகாய் | 225 | 180 | 170 | | 190 |
| தேசி | 70 | 70 | 65 | | 65 |
| சின்ன வெங்காயம் (உள்ளூர்) | 200 | 200 | 180 | | 90 |
| சின்ன வெங்காயம் (இறக்குமதி) | 190 | 193 | 184 | | 180 |
| பெரிய வெங்காயம் (உள்ளூர்) | | | | | |
| பெரிய வெங்காயம் (இறக்குமதி) | 95 | 93 | 107 | | 66 |
| உருளைக்கிழங்கு (உள்ளூர்) | 135 | 133 | 105 | | 122 |
| உருளைக்கிழங்கு (இறக்குமதி) | 90 | 80 | 88 | | 71 |
| உலர்ந்த மிளகாய் (இறக்குமதி) | 475 | 475 | 475 | | 470 |
| தேங்காய் (சராசரி) | | | | | |

#### தம்புள்ள சந்தை மொத்த விலைகள்

| | 08.03.2021 | 09.03.2021 | 10.03.2021 | 11.03.2021 | 12.03.2021 |
|---|---|---|---|---|---|
| போஞ்சி | 125 | 145 | 145 | | 133 |
| கேரட் | 135 | 145 | 135 | | 125 |
| கோவா | 93 | 105 | 95 | | 75 |
| தக்காளி | 125 | 135 | 105 | | 115 |
| கத்திரிக்காய் | 38 | 55 | 35 | | 53 |
| பூசணி | 83 | 78 | 85 | | 73 |
| புடலங்காய் | 75 | 95 | 75 | | 55 |
| பச்சை மிளகாய் | 175 | 195 | 195 | | 195 |
| தேசி | 75 | 75 | 78 | | 78 |
| சின்ன வெங்காயம் (உள்ளூர்) | 165 | | 168 | | 135 |
| சின்ன வெங்காயம் (இறக்குமதி) | 178 | 173 | | | 158 |
| பெரிய வெங்காயம் (உள்ளூர்) | | | | | |
| பெரிய வெங்காயம் (இறக்குமதி) | 83 | 75 | 83 | | 58 |
| உருளைக்கிழங்கு (உள்ளூர்) | 123 | 108 | 118 | | 98 |
| உலர்ந்த மிளகாய் (இறக்குமதி) | | 538 | 490 | | 508 |
| தேங்காய் (சராசரி) | 74 | 75 | 64 | | 68 |

#### தம்புள்ள சந்தை சில்லறை விலைகள்

| | 08.03.2021 | 09.03.2021 | 10.03.2021 | 11.03.2021 | 12.03.2021 |
|---|---|---|---|---|---|
| போஞ்சி | 145 | 165 | 165 | | 153 |
| கேரட் | 155 | 165 | 155 | | 145 |
| கோவா | 113 | 125 | 115 | | 95 |
| தக்காளி | 145 | 155 | 125 | | 135 |
| கத்திரிக்காய் | 58 | 75 | 55 | | 73 |
| பூசணி | 103 | 98 | 105 | | 93 |
| புடலங்காய் | 95 | 115 | 95 | | 75 |
| பச்சை மிளகாய் | 195 | 215 | 215 | | 215 |
| தேசி | 95 | 95 | 98 | | 98 |
| சின்ன வெங்காயம் (உள்ளூர்) | 175 | | 178 | | 145 |
| சின்ன வெங்காயம் (இறக்குமதி) | 188 | 183 | | | 168 |
| பெரிய வெங்காயம் (இறக்குமதி) | 98 | 85 | 93 | | 68 |
| உருளைக்கிழங்கு (உள்ளூர்) | 133 | 118 | 128 | | 108 |
| தேங்காய் (சராசரி) | 79 | 80 | 69 | | 73 |

#### தம்புள்ள சந்தை பழங்கள் மொத்த விலைகள்

| பழங்கள் | 08.03.2021 | 09.03.2021 | 10.03.2021 | 11.03.2021 | 12.03.2021 |
|---|---|---|---|---|---|
| வாழைப்பழம் | 55 | 45 | 45 | | 63 |
| பப்பாசி | 58 | 65 | 65 | | 85 |
| அன்னாசி | 83 | 95 | 95 | | 88 |
| ஆப்பிள் (இறக்குமதி) | 44 | 44 | 44 | | 44 |
| ஆரஞ்சு (இறக்குமதி) | 55 | 55 | 55 | | 55 |

#### தம்புள்ள சந்தை பழங்கள் சில்லறை விலைகள்

| பழங்கள் | 08.03.2021 | 09.03.2021 | 10.03.2021 | 11.03.2021 | 12.03.2021 |
|---|---|---|---|---|---|
| வாழைப்பழம் | 55 | 45 | 45 | | 63 |
| பப்பாசி | 58 | 65 | 65 | | 85 |
| அன்னாசி | 83 | 95 | 95 | | 88 |
| ஆப்பிள் (இறக்குமதி) | 44 | 44 | 44 | | 44 |
| ஆரஞ்சு (இறக்குமதி) | 55 | 55 | 55 | | 55 |



ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

உணவுத் தவிர்ப்பில் ஈடுபட்டுள்ள

# அம்பிகையின் கோரிக்கைக்கு ஓரணியில் வலுச் சேர்ப்போம்!

## ரெலோ இளைஞர் அணி வலியுறுத்தல்

அம்பிகையின் கோரிக்கைக்கு ஓரணியில் வலுச் சேர்ப்போம் என தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) இளைஞர் அணி தெரிவித்துள்ளது.

வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும் ரெலோவின் இளைஞர் அணித் தலைவருமான சபா குகதாஸ் நேற்று (வெள்ளிக்கிழமை) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுக்கையில் –

இறுதிப் போரில் முள்ளிவாய்க்காலில் ஸ்ரீலங்கா அரச படைகளால் மேற்கொள்ளப்பட்ட தமிழின அழிப்புக்கு நீதி கிடைக்க இலங்கை அரசை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்தும் தீர்மானத்துடன் பிரதான நான்கு கோரிக்கைகளை முன்வைத்து பிரித்தானிய அரசிடம் சாகும் வரை உணவு தவிர்ப்புப் போராட்டத்தை நடத்திவரும் பிரித்தானிய வாழ் தாயக உறவு அம்பிகை செல்வகுமார் அம்மையாரின் கோரிக்கைக்கு வலுச் சேர்க்கும் முகமாக தாயக, புலம் பெயர் தேசங்களில் வாழும் அனைவரையும் ஓரணியில் குரல் கொடுக்குமாறும் பிரித்தானியா உள்ளிட்ட கோப் குறூப் நாடுகளின் கவனத்திற்கும் அவர்களின் ஆதரவையும் ஏற்புதலையும் பெற்று அம்பிகையின் உயிரை பாதுகாக்க ஒன்றிணையுமாறு தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் இளைஞர் அணி கேட்டுக் கொள்கின்றது.

ஜெனிவா மனித உரிமைப் பேரவையில் நடைபெறும் 46 ஆவது கூட்டத் தொடரில் வெளியான பூச்சிய அறிக்கைக்கு பின்னர் தமிழர்களின் எதிர்பார்ப்பான சர்வதேச நீதிப் பொறிமுறை தீர்மானத்தில் இடம்பெறவில்லை என்றவுடன் ரெலோ தலைமைக்குழு அதன் ஏமாற்றத்தையும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இலங்கை அரசைப் பாரப்படுத்தும் தீர்மானத்தை இறுதி வரையில் உள்ளடக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் அடங்கிய கடிதத்தை ரெலோவின் பிரித்தானிய கிளை ஊடாக 21-02-2021 பிரித்தானிய வெளிவிவகாரச் செயலகத்துக்கு அனுப்பி உறுதி செய்துள்ளது.

அந்த வகையில் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் பாதிக்கப்பட்ட எம் இனத்திற்கு சர்வதேச நீதிப் பொறிமுறைகள் ஊடாகவே நீதி கிடைக்க வேண்டும் என்பதில் உறுதியான செயற்பாடுகளை முன்னெடுத்துவரும்போது அம்பிகையின் அஹிம்சை வழிப் போராட்டத்திற்கு வலுச் சேர்க்குமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா போன்ற மாவட்டங்களில் நடைபெறும் வலுச் சேர்ப்பு உணவுத் தவிர்ப்பு போராட்டங்களுக்கு ரெலோ இளைஞர் அணி முழுமையான ஆதரவை வழங்கியுள்ளது.

அத்துடன் 12-01-2021 வெளியான ஐ.நா மனித உரிமைப் பேரவையின் ஆணையாளரின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட விடயங்களை படித்து மனத்தைரியம் அடைந்து பாதிக்கப்பட்ட எம் இனத்துக்கு பூச்சிய அறிக்கையும் இறுதி வரைவும் பாரிய ஏமாற்றத்தை கொடுத்துள்ளன.

ஆனால் தொடர்ந்தும் எமக்கான நீதி கிடைக்கும் வரை சர்வதேச நீதிப் பொறிமுறைகளை தீர்மானமாக எடுக்க வேண்டும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் கோப் குறூப் நாடுகளிடம் கோரிக்கை முன்வைத்துள்ளோம் – எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இலங்கை குறித்து கருத்துரைக்க மேற்குலகிற்கு உரிமை கிடையாது!

## எஸ்.பி.திஸாநாயக்க சண்டித்தனம்



கொழும்பு, மார்ச் 14

இலங்கையின் மனித உரிமை தொடர்பாகக் கருத்துரைக்கும் தார்மீக உரிமை மேற்குலக நாடுகளுக்குக் கிடையாது.

குறுகிய அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஜெனிவா விவகாரத்தில் தீர்வு காண அரசாங்கம் ஒருபோதும் இராணுவத்தை காட்டிக் கொடுக்காது என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

இலங்கையின் மனித உரிமை தொடர்பாகக் கருத்துரைப்பதற்கு மேற்குலக நாடுகளுக்கு எவ்வித உரிமையும் கிடையாது. இலங்கையில் இறுதிக்கட்ட யுத்தத்தில் எவ்வித மனித உரிமை மீறல் குற்றங்களும் இடம்பெறவில்லை.

30 வருட யுத்தம் முடிவுக்குக்கொண்டு வரப்பட்டதன் பின்னர் 12 ஆயிரத்துக்கும் அதிகமான போராளிகளுக்கு அரசாங்கம் புனர்வாழ்வளித்தது இது உலகிற்கே சிறந்ததோர் எடுத்துக்காட்டாகக் கருதப்பட்டது.

குறுகிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

மனித உரிமை பேரவையின் சுயாதீனத்தன்மை கூட விமர்சனத்துக்குள்ளாக்கப்பட்டுள்ளது. மனித உரிமை பேரவையை கடுமையாக விமர்சித்து 2018 ஆம் ஆண்டு அமெரிக்கா பேரவையில் இருந்து வெளியேறியது.

இவ்வாறான நிலையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா பிரேரணையை கொண்டு வருவது நகைப்புக்குரியது.

ஜெனிவா விவகாரத்தில் தீர்வு காண அரசாங்கம் இராணுவத்தினரை ஒருபோதும் காட்டிக் கொடுக்காது. இராணுவத்தினரை பாதுகாக்க விசேட பொறிமுறை வகுக்கப்படும். சர்வதேசத்துடன் இணக்கமாக செயற்பட வேண்டும் என்பது அவசியம் அதற்காக நாட்டின் இறையாண்மையை ஒருபோதும் விட்டுக் கொடுக்க முடியாது. –என்றார்.

# இலங்கையின் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பாக பிரித்தானிய நாடாளுமன்றத்தில் விவாதம்!

இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் ஆகியவற்றிற்கான பிரித்தானியாவின் நடவடிக்கைகள் தொடர்பாக அந்நாட்டு நாடாளுமன்றத்தில் விவாதம் ஒன்று இடம்பெறவுள்ளது.

அதன்படி எதிர்வரும் 18 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெறவுள்ள குறித்த விவாதத்தில் இலங்கை தொடர்பான பிரித்தானியாவின் கடமை தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் விவாதிக்கவுள்ளனர்.

நாடாளுமன்றத்தின் பின்வரிசை உறுப்பினர்களான சியோபேன் மெக்டோனாக், எலியட் கோல்பர்ன் மற்றும் சேர் எட்வர்ட் டேவி ஆகியோர் குறித்த விவாதத்தை முன்வைத்துள்ளனர்.

# 25 கோடிக்கும் அதிகமான பணத்தை சீட்டிழுப்பில் வென்ற தமிழ்ப் பெண்!



அபிவிருத்தி லொத்தர் சபையின் கோடாதிபதி சீட்டிழுப்பின் வெற்றியாளர்கள் ஐவருக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் அலரி மாளிகையில் வைத்து கடந்த வெள்ளிக்கிழமை காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

கோடாதிபதி கப்ருக 687 மற்றும் 689, சனிக்கிழமை அதிஷ்டம் 35 கோடியே 7 லட்சத்து 3 ஆயிரத்து 543 மற்றும் அபிவிருத்தி அதிஷ்டம் 411 ஆகிய வெற்றி வாரங்களின் வெற்றியாளர்களுக்கு இவ்வாறு பிரதமரால் பரிசு காசோலைகள் வழங்கப்பட்டுள்ளன.

வஞ்சாவல, பேராதனை, லுணுவில, புஸ்ஸல்லாவ, மற்றும் கஹவத்த பிரதேசங்களின் குறித்த சீட்டிழுப்பு வெற்றியாளர்களுக்கு வழங்கப்பட்ட மொத்த தொகை 25 கோடி ரூபாவுக்கும் அதிகமாகும்.

இந்த வெற்றியாளர்களில் தமிழ்ப் பெண்ணும் இடம்பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறித்த சந்தர்ப்பத்தில் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தன, அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவர் அமித கமகே உள்ளிட்ட அபிவிருத்தி லொத்தர் சபையின் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# நாடு திரும்புபவர்கள் 14 நாள் தனிமை நடைமுறையை மறுபரிசீலனை செய்க!

தாம் வாழ்ந்த நாட்டில் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்று, நாடு திரும்பும் இலங்கையர்களை 14 நாள் கட்டாய தனிமைக்காக, அரசு நடத்தும் நிலையங்களுக்கோ அல்லது சொந்த நிதியை செலுத்த சொல்லி ஐந்து, மூன்று நட்சத்திர விடுதிகளுக்கோ அனுப்பப்படக்கூடாது. இந்த நடைமுறையை மறுபரிசீலனை செய்ய வேண்டும். அவர்களது சொந்த வீடுகளில் சுயதனிமைக்கு அனுமதிக்கப்பட வேண்டும்.

இந்த யோசனைபற்றி கொவிட் தடுப்பு இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளேயிடம் வினவிய போது, இன்னமும் இதுபற்றி இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என நாடாளுமன்றத்தில் அவர் என்னிடம் தெரிவித்தார் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி மனோ எம்.பி. மேலும் கூறியவை வருமாறு –

தொழில் காரணமாகவோ அல்லது விடுமுறை நோக்கிலோ வெளிநாடு சென்றுள்ள இலங்கையர், தாம் இன்று வாழும் நாட்டில் தடுப்பூசிகள் இரண்டையும் பெற்று இருப்பார்கள் எனில், அவர்கள் இன்று தாய் நாடு திரும்பும் போது, அவர்களை தமது சொந்த வீடுகளிலேயே சுய தனிமைக்கு உள்ளாக்க வேண்டும்.

ஐந்து, மூன்று நட்சத்திர விடுதிகளில் தங்க வைப்பது, அதற்கான கட்டண நிர்ணயம், வெளிநாட்டில் இருந்து நாடு திரும்பும் விமான பயணசீட்டு கட்டணம் ஆகியவை தொடர்பில் பெரும் திட்டமிட்ட முறைகேடுகள் நடைபெறுகின்றன எனத் தகவல்கள் கிடைத்துள்ளன.

அதுபோல், அரசு நடத்தும் நிலையங்களில் 14 நாள்கள் தங்க வைக்கப்படும் நாடு திரும்பும் இலங்கையர்களும், அங்கே முறையாக கவனிக்கப்படுவதில்லை. எல்லா இடங்களிலும் முறைகேடுகள் இடம்பெறுகின்றன.

இவற்றால், வெளிநாடுகள் சென்று உழைத்து அதன்மூலம் இந்நாட்டுக்கு அந்நிய செலாவணியை பெற்று தந்து, இன்று தொழில் இழந்து, பெரும் பொருளாதார சிக்கல்களில் மாட்டி இருக்கும் நம் நாட்டு மக்கள் பெரும் அவதியில் தள்ளப்பட்டுள்ளனர்.

நோயுற்றவர்கள் உடனடியாக வைத்தியநிலையங்களுக்குக்கொண்டு செல்லப்பட வேண்டும். ஏனையோர் சொந்த வீடுகளில், கண்காணிப்பின் கீழ் சுய தனிமைக்கு உள்ளாக்கப்பட வேண்டும். உலகின்பல நாடுகளில் இந்த முறை இப்போது அமுலுக்கு வந்துள்ளது.

எனது இந்த யோசனைபற்றி கொவிட் தடுப்பு இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளேயிடம் வினவிய போது, இதுபற்றி, இன்னமும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என அவர் நேற்று நாடாளுமன்றத்தில் என்னிடம் தெரிவித்தார்

எது எப்படி இருந்தாலும், நம் நாட்டு அப்பாவி மக்களின் நிர்க்கதி நிலைமையை பயன்படுத்தி பணம் பண்ணும் கோஷ்டிகளுக்கு இடம் அளிக்கும் முறையில் அரசின் சட்ட திட்ட விதி முறைகள் ஒருபோதும் அமைய கூடாது.

காலைக்கதிர் Kalaikkathir

# யுத்தக் குற்றத்தை எதிர்கொள்ளப்போகும் முன்னாள் விடுதலைப் புலிகள்!

– சட்டத்தரணி ஸ்ரனிஸ்லஸ் செலஸ்ரின் –



**ICCயின் ஆரம்பம்**

2002 இல் கொண்டுவரப்பட்ட Rome Statute என்ற சர்வதேச ஆவணத்தின் ஊடாக உலக அமைதியைபேணவும்ஒடுக்கப்பட்ட இனங்களைபாதுகாக்கவும் குற்றவாளிகளிற்குத் தண்டனை விதிப்பதன் மூலம் எதிர்காலத்தில் அவ்விதமான குற்றங்கள் வராமல் நிகழாமல் இருப்பதை உறுதிப்படுத்தவும் International Criminal Court - ICC ஸ்தாபிக்கப்பட்டது.

சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் (International Criminal Court - ICC) இதுவரை Central African Republic, Cote D'ivoire, Dafur, Kenya, Libya, Uganda, Bangladesh / Myanmar போன்ற நாடுகளில் விசாரணையை (Investigation) ஆரம்பித்துள்ளது.

மேலும், ICC யின் வழக்குத்தொடுநர் அலுவலகம் (The Office of the Prosecutor of the ICC) பின்வரும் நாடுகளில் யுத்தக்குற்றம் (War Crimes), மனித குலத்திற்கு எதிரான குற்றம் (Crimes Against Humanity) போன்ற குற்றங்கள் தொடர்பிலே அதன் ஆரம்பகட்ட விசாரணைகளை (Preliminary Investigation) ஐ ஆரம்பித்துள்ளது. Afghanistan, Columbia, Guinea, Iraq, United Kingdom, Nigeria, Palestine, Georgia, Honduras, South Korea ஆகிய நாடுகளில் ஆரம்பித்துள்ளது.

Gabon, Honduras, Greece, Cambodia, South Korea மற்றும் Venezuela ஆகிய நாடுகளில் 2002 இற்கு பின்னர் நடந்த இத்தகைய குற்றங்கள் தொடர்பிலே ஆரம்பகட்ட விசாரணையை முடிவுறுத்திக் கொண்டுள்ளது.

**ICC யின் ஆட்டம்**

ICC யின் முன் விசாரணை நீதிமன்றம் (Pre - Trial Chamber) இதுவரை 44 நபர்களிற்கு எதிராக குற்றப்பகர்வு பத்திரம் ( Indictment) தாக்கல் செய்துள்ளது. ICC இதுவரை 36 நபர்களிற்கு எதிராக பிடியாணை (Arrest Warrant), 8 பேரிற்கு அழைப்பாணை (Summon) அனுப்பியுள்ளது. 6 நபர்கள் ICC யின் தடுப்பில் உள்ளார்கள். 22 நபர்களிற்கு எதிரான குற்றவியல் நடவடிக்கைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. 15 பேர் ICC ற்குத் தண்ணி காட்டி தலைமறைவாக உள்ளார்கள். ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். ஆனால், ICC யின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்படவில்லை. இருவர் ICC யின் Pre Trial Stage ல் உள்ளார்கள். 4 பேர் ICC யின் விளக்கத்தை (Trial) ஐ எதிர்கொண்டு வருகிறார்கள். 22 பேரிற்கு எதிரான நடவடிக்கைகள் நிறைவு பெற்றுள்ளன. இரண்டு நபர்கள் சிறைக்கு அனுப்பப்பட்டுள்ளார்கள். 4 பேர் தமது சிறைக் காலத்தை நிறைவு செய்துள்ளார்கள். இருவர் வழக்குகளில் இருந்து விடுதலை ஆகியுள்ளார்கள். 6 பேரிற்கு எதிரான வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. இரண்டு பேரிற்கு எதிரான வழக்குகள் மீளப்பெறப்பட்டுள்ளன. ஒரு நபரிற்கு எதிரான வழக்கு அனுமதிக்க முடியாத வழக்கு விளம்பல் செய்யப்பட்டது. 4 நபர்கள் வழக்கின் விளக்கம் ஆரம்பமாவதற்கு முன்பாகவே மரணித்து விட்டார்கள்.

2010 வரையான காலப்பகுதிவரை மேற் கூறப்பட்டவாறான பாரதூரமான குற்றங்கள் தொடர்பில் சுமார் 8,847 முறைப்பாடுகள் ICC க்கு கிடைக்கப்பெற்றன. ஆரம்பகட்ட மீளாய்வின் பின்னர் குறித்த குற்றங்களை விசாரணை செய்ய ICC க்கு அதிகாரம் இல்லை எனக்கூறி 4,002 முறைப்பாடுகளை ஏற்க ICC மறுத்திவிட்டது.

ஆக,

ICC ஆரம்பமான காலத்தில் இருந்து இற்றை வரையான சுமார் 19 வருட காலத்தில் சுமார் 1000 மில்லியன் US Dollar (நூறு கோடி டொலர்) செலவு செய்து ICC புடுங்கிய ஆணிகள் இவ்வளவுதான் என சிலரிற்குப் புரியும் தமிழில் கூறலாம்.

**ICC யின் அதிகாரம்**

Rome Statute ஐ ஏற்று கையொப்பமிட்டு, பின்னர் அச்சட்டத்திற்கு அமைவாக உள்நாட்டில் நாடாளுமன்றத்தில் இன்னொரு சட்டம் கொண்டுவந்து அது நாடாளுமன்றில் பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டால்தான் ICC அந்த நாட்டில் நடந்த பாரிய குற்றத்திற்கு விசாரணை செய்யும் அதிகாரத்தை பெறும். இதனை Dualist Legal System என அழைப்பர்.

இலங்கை மட்டுமல்ல, இந்தியாவும், ஏன் அமெரிக்காவும்கூட Rome Statute ஐ ஏற்று இதுவரை கைசாத்திடவில்லை. வறிய நாடுகளை கொண்டுள்ள ஆபிரிக்க நாடுகளே Rome Statute ஐ அதிகமாக பொருளாதார நலன்கருதி ஏற்றுக்கொண்டுள்ளன என்பது கவனிக்கத்தக்கது.

**சர்வதேச விசாரணை**

பின்வரும் சந்தர்ப்பங்களில் ICC ஆல் சர்வதேச விசாரணை ஆரம்பமாகும்.

1. Rome Statute ஐ ஏற்று அங்கீகரித்த நாடு ஒன்று தனது நாட்டில் நடந்த பாரதூரமான குற்றம் தொடர்பில் விசாரணை செய்யுமாறு ICC ஐ கோரும்போது.

(2019 November வரை ரணில் விக்கிரமசிங்க அரசுடன் கூடிக்குலாவித் திரிந்த கூட்டமைப்பு அரசியல்வாதிகள் தமக்கான சலுகைகளை அனுபவித்தார்களே தவிர Rome Statue ஐ இலங்கை அரசு ஏற்று கைச்சாத்திட வேண்டும் என்றோ, இலங்கை யுத்தக் குற்றவாளிகளை ICC விசாரிக்க வேண்டும் என்று இலங்கை அரசு ஊடாக எந்த காத்திரமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதை வாசகர்களிற்கு ஞாபகமூட்ட விரும்புகிறேன்).

2. ஒரு நாட்டின் வன்மமான நடவடிக்கைகளால் சர்வதேச அமைதிக்கும் பாதுகாப்பிற்கும் பாரிய அச்சுறுத்தல் உள்ளது என United Nations Security Council (ஐ.நா.பாதுகாப்புசபை) நம்பத்தகுஅறிக்கைகளின் அடிப்படையில் ICC யின் நடவடிக்கைகளிற்காக Rome Statue இல் கைச்சாத்திடாத நாட்டைகூட ICC இற்குப் பாரப்படுத்தலாம். ஆனால் ஐ.நா. பாதுகாப்பு சபையில் நிரந்தர உறுப்புரிமையை கொண்டுள்ள 5 நாடுகளில் ரஷ்யாவும் சீனாவும் எப்போதும் இலங்கையின் நண்பர்கள். 2009 ஆம் ஆண்டில் ஆயிரக்கணக்கில் தமிழர்கள் கொன்றொழிக்கப்பட்டு பிணங்களாக இலங்கைக்கு எதிரான தீர்மானம் UNHRC (ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை)யில் கொண்டுவரப்பட்ட போது கூட அத்தீர்மானத்திற்கு எதிராக சீனாவும் ரஷ்யாவும் மட்டுமல்ல ஐ.நா. பாதுகாப்பு சபையில் தற்காலிக அங்கத்துவத்தை கொண்டுள்ள இந்தியாவும் இலங்கை அரசிற்கு ஆதரவாகவே செயற்பட்டிருந்தன. அதனால்தான் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையால் 27.05.2009 இல் நிறைவேற்றப்பட்ட S - 11/1 என்ற தீர்மானத்தில் யுத்தம் தொடர்பிலே இலங்கை அரசின் செயல்கள் புகழப்பட்டும், மக்களைப் பணயக்கைதிகளாக பிடித்து வைத்திருந்த விடுதலைப் புலிகளின் செயல்களைக் கண்டித்தும்தான் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது என்ற விடயம் தமிழர் பலரிற்கு தெரிந்தே இருக்காது. ஐ.நா. பாதுகாப்பு சபை இலங்கையை யுத்தக் குற்றத் திற்காக ICCயிடம் பாரப்படுத்துவது என்பது கனவிலும் நடக்க முடியாத காரியம் என்பது சர்வதேச சட்டம் அறிந்த அனைவரிற்கும் தெரியும். தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் இது தெரிந்தும் தெரியாத மாதிரி நடிக்கிறார்கள். வெறும் அற்ப பதவி கதிரைக்காக தமிழ்த் தேசியம் பேசும் வஞ்சக கட்சிகளின் சுத்த பித்தலாட்டம் இது. (தமிழ்த் தேசியம் என்ற பெயரில் இயங்கும் அத்தனை கட்சிகளையும் முதலில் இலங் கையில் தடை செய்ய வேண்டும். அப்போதுதான் தமிழ் இனம் உருப்படும்).

3. Rome Statute இல் ஏற்றுக்கொண்ட நாடுகள் தொடர்பில் யுத்தக் குற்றத்திற்காக விசாரணை செய்யுமாறு ஏனைய பொது அமைப்புகள் (NGO) ஆதாரபூர்வமாக ICC ஐக் கோரும்போது ICC விசாரணையை தொடங்கும்.

**யுத்தக் குற்றங்கள்**

Rome Statute ல் பின்வரும் விடயங்கள் யுத்தக் குற்றங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

1. சிவிலியன்கள் மீதும் சிவிலியன் கட்டடங்களின் மீதும் தாக்குதல் நடத்துவது.

2. யுத்தத்தில் ஈடுபட்டு பிடிபடுபவர்களையும் சரணடைந்தவர்களையும் படுகொலை செய்வது.

3. பலவந்தமாக காணாமல் போகச் செய்வது.

4. யுத்த வலயத்தில் சிக்குண்ட மக்களிற்கு உணவு, மருந்து, சுத்தமான குடிதண்ணீரைத் தடைசெய்வது.

5. சிறுவர்களைப் படையில் சேர்த்தமை. ( Child Recruitment)

**தருஸ்மன் அறிக்கை**

2010ஆம் ஆண்டு June மாதம் ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கீ மூன் அவர்களால் இலங்கையில் நடந்த இறுதி யுத்தத்தின்போது யுத்தக் குற்றங்கள் புரியப்பட்டனவா என்பது தொடர்பில் தனக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு கோரி இந்தோனேசியாவைச் சேர்ந்த Marzuki Darusman தலைமையில் 3 பேர்கொண்ட ஓர் நிபுணர் குழுவை நியமித்தார். இந்த நிபுணர் குழு நியமனத்தை ரஷ்யாவும் சீனாவும் எதிர்த்தன என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களின் அறிக்கை 12.04.2011

(09ஆம் பக்கம் பார்க்க)



# யுத்தக் குற்றத்தை எதிர்கொள்ளப்போகும் முன்னாள் விடுதலைப் புலிகள்!

> இலங்கை ஒரு தனித் தீவாக இருப்பதா லும் இலங்கை அரசின் சர்வதேச இராஜதந்திர உறவுகள் மிக உயர்வாக உள்ளதாலும் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்புரிமையும் அதன் தீர்ம ானங்களை இல்லாதொழிக்கும் வீட்டோ அதிகாரத்தையும் கொண்டுள்ள ரஷ்யாவும் சீனாவும் இலங்கையின் உற்ற நண்பர்களாக இருப்பதாலும் இலங்கையின் அயல்நாடான இந்தியாகூட **Rome Statue** ஐ ஏற்று கையெழுத்திடாததாலும் இலங்கையின் செயற்பாட டால் சர்வதேச அமைதி,பாதுகாப்பிற்கு எதுவித அச்சு றுத்தலும் இல்லாத நிலையில் இலங்கை விவகாரத்தில் ஐ.நா. பாதுகாப்பு சபை தலையிடவோ அல்லது இலங் கையை **ICC**யிடன் பாரப்படுத்தும் நிலைமையோ ஒருபோதும் வரவில்லை.

அன்று பான் கீ மூனிடம் கையளிக்கப்பட்டது.

### யுத்தக் குற்றங்கள் புரிந்த விடுதலைப் புலிகள்

மேற்குறித்த **Darusman** அறிக்கை அரச படைகள் மட்டுமல்ல தமிழீழ விடுதலைப்புலிகளும் பெரும் யுத்தக் குற்றங்கள் செய்தார்கள் என்பதற்கான நம் பத்தகுந்த ஆதாரங்கள் உள்ளன எனக் கூறியதுடன் இக்குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் இரு தரப்பு படைத்தளபதிகளும் அரசியல் தலைவர்களும் யுத்தக் குற்றங்களிற்கு பொறுப்பாளியாவார்கள் என்பதுடன் **ICC** ஆல் தண்டிக்கப்படவும் வேண்டியவர்கள் ஆவார்கள் என அவ் அறிக்கையில் தெரிவித்தார்கள். அவ் அறிக்கையில் உள்ள சில பத்திகளை அப்படியே இங்கு மீள் பிரசுரம் செய்கிறேன்.

**1. The panel found credible allegations, which if proven, indicate that a wide range of serious violations of international humanitarian law and international human rights law were committed both by the government of Sri Lanka and the LTTE, some of which would amount to war crimes and crimes against humanity.**

**2. The panel found credible allegations that the TamilTigers used civilians as a human buffer; killed civilians attempting to escape Tamil Tigers control; used military equipments in the proximity of civilians; forcibly recruited children; used forced Labour; killed civilians using suicide attacks.**

**3. The report states that the credible allegations demand serious investigations and the prosecutions of those responsible. If the allegations are proved senior commanders, military and political, on both sides are liable for prosecution under international criminal law.**

இதற்கு மேலதிகமாக புலிகளால் புரியப்பட்ட யுத் தக் குற்றங்களாக பின்வருவனவற்றை பட்டியல் இட்டுள்ளார்கள்.

**a)** சுமார் 300,000இற்கும் மேற்பட்ட தமிழரை பணயக் கைதிகளாக யுத்த வலயத்தைவிட்டு வெளி யேறாமல் தடுத்து வைத்திருந்தார்கள்.

**b)** புலிகள் 14 வயதிற்கு குறைந்த சிறுவர்களைக் கூட தமது படையில் இணைத்தார்கள்.

**c)** வயதான முதியவர்களை பதுங்குகுழி வெட்டக் கட்டாயப்படுத்தி அதனால் அவர்களிற்கு உயிராபத்தை ஏற்படுத்தினார்கள்.

**d)** புலிகள் யுத்தத்தில் தாங்கள் தோற்கப்போகிறோம் என தெரிந்த பின்னரும் தமது தலைவர்களை காப்பாற் றும் நோக்குடன் தொடர்ந்து யுத்தம் புரிந்தமையால் பொதுமக்களிற்கு தேவையற்ற பெருமளவு உயி ரிழப்புக்கள் ஏற்பட்டன.

**e)** யுத்த வலயத்தில் இருந்து தப்பி ஓடிய சிவிலியன் களை மிக அருகில் இருந்து புலிகள் சுட்டுக்கொன் றார்கள்.

**f)** ஆஸ்பத்திரி போன்ற பொதுமக்கள் பயன்படுத்தும் கட்டட அமைப்புக்களிற்கு அருகிலும் பொதுமக்க ளிற்கு அருகிலும் ஆட்லறி போன்ற யுத்த உபகரணாங் களைப் பயன்படுத்தி அதனால் அழிவிற்கு வித்திட் டார்கள்.

**g)** இவற்றைவிட பலமடங்கு யுத்தக் குற்றங்களை அரச படையினர் புரிந்தார்கள் என அவற்றையும் பட் டியல் இட்டுள்ளார்கள்.

### இலங்கை அரசின் யுத்தக்குற்ற மீறல்கள்

இலங்கை அரச படைகள் புரிந்த யுத்தக்குற்ற மீறல்கள் முழு உலகிற்கே தெரியும். அதனை ஆராய் வது இக்கட்டுரையின் நோக்கம் அல்ல என்பதை வாசகர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

### பாதுகாப்பு சபையால் ICCக்குப் பாரப்படுத்தல்

ஐ.நாவின் பாதுகாப்பு சபை **Rome Statue** இன் பிரிவு 13 **B**ஈற்கு அமைவாகவும் ஐ.நா. பட்டயத்திற்கு அமைவாகவும் **Rome Statue** ஐ ஏற்று கைச்சாத்திடாத நாடுகளைகூட, **ICC** க்குப் பாரப்படுத்த ஐ.நா. பாதுகாப் புச் சபைக்கு அதிகாரத்தை கொடுக்கிறது.

**UN Charter** இன் குறித்த இயைபான பிரிவை அவ்வாறே கீழே மீள்பிரசுரம் செய்கிறேன்:-

**Chapter VII of the United Nations Charter sets out the UN Security Council's powers to maintain peace. It allows the Council to ''determine the existence of any threat to the peace, breach of the peace, or act of aggression'' and to take military and nonmilitary action to ''restore international peace and security.''**

ஆனால், இலங்கை ஒரு தனி தீவாக இருப்பதா லும் இலங்கை அரசின் சர்வதேச இராஜதந்திர உற வுகள் (**International Diplomatic Relations**) மிக உயர்வாக உள்ளதாலும் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்புரிமையும் அதன் தீர்மானங்களை இல்லாதொழிக்கும் வீட்டோ அதிகாரத்தையும் கொண்டுள்ள ரஷ்யாவும் சீனாவும் இலங்கையின் உற்ற நண்பர்களாக இருப்பதாலும் இலங்கையின் அயல்நாடான இந்தியாகூட **Rome Statue** ஐ ஏற்று கையெழுத்திடாததாலும் இலங்கையின் செயற்பாட் டால் சர்வதேச அமைதி,பாதுகாப்பிற்கு எதுவித அச்சு றுத்தலும் இல்லாத நிலையில் இலங்கை விவகாரத்தில் ஐ.நா. பாதுகாப்பு சபை தலையிடவோ அல்லது இலங் கையை **ICC**யிடன் பாரப்படுத்தும் நிலைமையோ ஒருபோதும் வரவில்லை.

### உலகளாவிய நியாயாதிக்கம்

யுத்தக் குற்ற விசாரணை தொடர்பிலான அடுத்த எண்ணக்கரு உலகளாவிய நியாயாதிக்கம் (**Universal Jurisdiction**) என்ன என்பதாகும்.

**Rome Statue** ஐ ஏற்றுக்கொண்ட நாடுகள் யுத்தக் குற்றத்திற்காக உள்ள பொறிமுறையைப் பயன்படுத்தி குற்றம் செய்தவர்களை தண்டிக்கும். இலகுவாக விளங்குவதானால், யாழ்ப்பாண நகரில் குற்றம் ஒன்று நிகழுமானால் அதனை யாழ் பொலிஸார்தான் விசாரிப்பார்களே தவிர பருத்தித்துறை பொலிஸாரோ அல்லது வேறு இடத்தை சேர்ந்த பொலிஸாரோ விசாரிக்க முடியாது. எந்த நாட்டில் குற்றம் நிகழ்ந்ததோ அந்த நாடு அதனை விசாரணை செய்ய வேண்டும்.

ஆனால், எந்த நாட்டில், எந்த மூலையில் குற்றம் நிகழ்ந்தாலும் அது பாரதூரமான குற்றமாக (**Heinous Crimes**) இருப்பின் குற்றம் செய்தவர்கள் எந்த நாட்டு குடிமக்களாக இருந்தாலும், **Rome Statute** ஐ அங்கீகரித்த நாடுகள் அக்குற்றவாளிகளிற்கு எதிராக தமது நாட்டில் குற்றச்சாட்டு பத்திரத்தை தாக்கல் செய்து யுத்தக் குற்றத் திற்கு (**War Crimes**) எதிராவும் மனித குலத்திற்கு எதி ரான குற்றத்திற்கு (**Crimes Against Humanity**)எதிராகவும் இன அழிப்பு குற்றத்திற்கு (**Genocide**) எதிராகவும் வழக்குத் தாக்கல் செய்து அக்குற்றவாளிகள் தமது நாட்டு எல்லைக்குள் வசித் தால் அவர்களை தண்டிக்க முடியும்.

உதாரணமாக இலங்கையில் யுத்தக்குற்றம் புரிந்ததாக கூறப்படும் சவேந்திர சில்வா லண்டனிற்கு சென்றால் **United Kingdom** அரசாங்கம் இலங்கை யில் நடந்த யுத்தக் குற்றத்திற்காக லண்டனில் சவேந் திர சில்வாவிற்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்து அவரை தண்டிக்க முடியும். **ICC** க்கு போகா மலேயே இவற்றை செய்ய முடியும்.

உலகில் எப்பாகத்திலும் யுத்தக் குற்றம் செய்தாலும் குறித்த நாட்டில் சிக்கினால் இந்த உலகளாவிய நியா யாதிக்கம் என்ற எண்ணக்கருவைப் பயன்படுத்தி அவர்களைத் தண்டிக்க முடியும். புரிகிறதல்லவா..?

### ஐரோப்பிய அகதி அந்தஸ்துத் தமிழர்கள்

அதிகளவான ஐரோப்பிய நாடுகளும் வளர்ச்சிய டைந்த ஏனைய சில நாடுகளும் **Rome Statue** ஐ ஏற்று கைச்சாத்திட்டுள்ளன.

அவையாவன **Australia, Belgium, Bosnia and Herzegovina, Bulgaria, Canada, Croatia, Denmark, Estonia, Finland, Georgia, Germany, Iceland, Liechtenstein, Lithuania, Malta, Netherlands, New Zealand, Slovakia, South Africa, Spain, Trinidad and Tobago, United Kingdom, France, Norway, Peru, Poland, Slovenia, Sweden, Switzerland.**

மேற்கூறிய நாடுகளிலே அதிகமானவற்றில் தமி ழர் அரசியல் தஞ்சம் (**Political Asylum**) கோரியுள்ள மையுடன் முக்கியமான ஆவணங்களிலே தாம் விடு தலைப் புலிகள் அமைப்பில் இருந்தமையை ஏற்றுக் கொண்டும், இலங்கை திரும்பினால் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தாம் வழக்கை எதிர்கொள்ள வேண்டி ஏற்படும் எனக் கூறியும் ஆயிரக்கணக்காண தமிழர் இந்நாடுகளில் அகதி அந்தஸ்து பெற்று வாழ்கின்றனர். இதில் பல நூற்றுக்கணக்கான விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர்களும் உள் ளடங்குகின்றனர்.

யுத்தக் குற்றத்திற்கு இலங்கை இராணுவத் தளபதி களையோ இலங்கை சிங்கள அரசியல் தலைவர்க ளையோ அல்லது தமிழ் அரசியல் தலைவர்களையோ **ICC** ஆல் தண்டிக்க சந்தர்ப்பம் இல்லாத நிலையில் இலங்கை தமிழ் தேசிய அரசியல்வாதிகளின் அழுத் தம் சர்வதேச நாடுகளை உலகளாவிய நியாயாதி க்கம் என்ற அஸ்திரத்தை பயன்படுத்தி யுத்தக் குற்றவாளி களைத் தண்டிக்க வழிவகுக்கும். ஆனால் அப்படி ஒரு நிலை வந்தால் இம்முறை தண்டிக்கப்படப்போவது சிங்களராணுவமோ அல்லது சிங்கள அரசியல்வாதி களோ அல்லர்.

### துன்புறப்போகும் புலிகள்

அப்படி உலகளாவிய நியாயாதிக்கத்தின் கீழ் யுத்தக் குற்றத்திற்காக ஐரோப்பிய நாடுகளால் தண் டிக்கப் படபோவது ஐரோப்பிய நாடுகளில் வாழும் முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள்தான்.

பதவிக் கதிரை ஆசைக்காக மட்டும் அரசியல் செய் யும் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளின் முட்டாள்த னத்தின் மற்றொரு அறுவடை இதுவாகத்தான் இருக்கும்.

### தமிழரின் சாபக்கேடு

இயக்கங்களை யுத்தத்தை நோக்கி தள்ளிவிட்டு பின்னர் எட்ட நின்று குளிர்காய்ந்த தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் யுத்தம் முடிவடைந்து 11 வருடங்கள் முடிவடைந்த நிலையில் தமிழர் பிரச்சினைகள் எதனையும் தீர்க்காமல் தமிழரின்உணர்ச்சியை மூலதனமாக்கி அதனை வாக்குளாக மாற்றி மிச்சமுள்ள புலிகளையும் தண்டிக்கச் செய்வதற்கு மறைமுகமா கவும் நேரடியாகவும் ஈடுபட்டு வருகிறார்கள். தமிழர் ஏமாளிகளாக இருந்து இவர்களிற்கே தொடர்ச்சியாக வாக்களித்து ஏமாற்றப்படுகிறார்கள் என்பது தமிழரின் சாபக்கேடு.

### தீர்வு

தமிழர் இந்த தமிழ்த் தேசிய வியாதிகளின் பிடியில் இருந்து மீள வேண்டுமானால் முதலில் செய்ய வேண்டியது ஒன்றுதான்.

தமிழ்த் தேசியம், ஈழம் என்ற சொற்களுடன் இருக்கும் கட்சிகளின் பதிவுகளை உடனடியாக தடை செய்து ரத்துச்செய்துவிட்டு புதிய பெயர்களில் அவர்களின் கட்சிகளை பதிவு செய்ய ஆணையிடுவது.

பெயரில் என்ன உள்ளது என சிலர் வேடிக்கையாக சிரிக்கலாம். ஆனால், தமிழ்த் தேசிய மாயைகளில் இருந்து தமிழர் விடுபடுவதற்கு இப்பெயர்த் தடை கட்டாயமானது.

( கட்டுரையாளருடன் தொடர்பிற்கு
**E mail :- Stanis69gmail.com)**

# மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்துங்கள்!

## உரிய அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை



மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள சட்ட வரைபு அல்லது அதில் உள்ள குழப்பங்களை நீக்கி மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

தொகுதி முறை, எல்லை நிர்ணயம், ஐம்பதுக்கு ஐம்பது பெண்களின் அமைப்பு உள்ளிட்ட கடந்த அரசால் கொண்டு வரப்பட்ட சட்ட வரைவு அவர்களாலே தோற்கடிக்கப்பட்டது. மாகாண சபைகள் இப்போது மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் செயற்பட்டு வருகின்றன. இந்த நிலைமை குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி தேர்தலை விரைவாக நடத்த வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுலகத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மாகாண சபை குழுவுடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் தேசியத்துக்கும் பாதுகாப்புக்கும் முன்னுரிமை அளித்து கட்சியின் கொள்கைகள் மற்றும் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றி, கடந்த 15 மாதங்களில் முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் ஜனாதிபதி இதன்போது கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒரு தேசியவாத அரசு ஆட்சிக்கு வரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், அதனை வீழ்த்துவதற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சக்திகள் செயற்பட்டன. மஹிந்த ராஜபக்ஷவை வெளியேற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்ட தவறான பிரசாரங்களுக்கு பலியாகி கடந்த ஐந்து ஆண்டுகளில் நாடு எவ்வளவு தூரம் பின்னடைந்துள்ளது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அதன் காரணமாக முழு நாட்டுக்கும் பிக்குகளுக்கும் போர் வீரர்களுக்கும் ஏற்பட்ட அவல நிலையை மக்கள் அறிந்திருக்கின்றார்கள்.

இந்தச் சக்திகள் அரசின் தற்போதைய திட்டங்களை நாசப்படுத்த மீண்டும் முயற்சிக்கின்றன. உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை சம்பந்தமாக எதிர்க்கட்சியினர் பல்வேறு கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர். பேராயரின் ஒப்புதலுடனும் நம்பிக்கையின் அடிப்படையிலுமே ஆணைக் குழுவின் பணிகளைத் தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பெப்ரவரி முதலாம் திகதி ஒப்படைக்கப்பட்ட இந்த அறிக்கை 28 நாள்களுக்குள் அமைச்சரவை மற்றும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால், ஆணைக்குழுவின் அறிக்கையை மறைக்க முயற்சிப்பதாக எதிர்க்கட்சி தவறான பிரசாரங்களைப் பரப்புகின்றது. தேசிய பாதுகாப்பைப் பாதிக்கும் விடயங்களைத் தவிர மற்ற அனைத்தும் மக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய எம்.சி.சி. ஒப்பந்தம் வாபஸ் பெறப்பட்டுள்ளது. போர் வீரர்களுக்கும் நாட்டின் இறையாண்மைக்கும் பெரும் அடியைக் கொடுத்த ஐ.நா. மனித உரிமைகள் சபையின் இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துதல் தொடர்பான முன்மொழிவுக்கு வழங்கப்பட்ட இணை அனுசரணை நீக்கிக்கொள்ளப்பட்டது. குறுகிய காலத்தில் நாட்டுக்காக எடுக்கப்பட்ட இந்த நடவடிக்கைகள் குறித்து யாரும் பேசுவதில்லை. எவ்வாறாயினும், மக்கள் முன்வைக்கப்பட்டுள்ள வாக்குறுதிகள் மற்றும் கொள்கைகளைப் பாதுகாக்கும் அதே வேளையில் நாட்டின் முன்னேற்றத்துக்கும் நாம் உறுதிபூண்டுள்ளோம். - என்றார்.

# மோடியும் கோட்டாபயவும் தொலைபேசியில் பேச்சு

## ஜெனிவா விவகாரம் ஆராயப்பட்டதாகத் தகவல்





புதுடில்லி, மார்ச் 13

இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி, இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் தொலைபேசியில் இன்று பேசினார்.

- புதுடில்லியில் பிரதமர் அலுவலகம் இன்று பிற்பகல் இந்தத் தகவலைத் தெரிவித்தது.

இருவரும் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் விவகாரத்தை ஒட்டி உரையாடினார் என ஊர்ஜிதப்படுத்தப்படாத செய்திகள் தெரிவித்தன.

எனினும், சர்வதேச அமைப்புகளில் இரு நாட்டு ஒத்துழைப்புக் குறித்து இருவரும் உரையாடினர்' - என்ற சாரப்பட இந்தியப் பிரதமரின் அலுவலக செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டது ஜெனிவா விவகாரம்தான் என அவதானிகள் குறிப்பிட்டனர்.

"இரண்டு நாடுகளுக்கும் இடையில் இரு தரப்புகள் மற்றும் பல தரப்புகள் சம்பந்தப்பட்ட சர்வதேச அரங்குகளில் தற்போது பேணும் ஒத்துழைப்பு உட்பட பல தரப்பட்ட விடயங்களை மேலோட்டமாகப் பேசினார்.

"இப்போதைய கொவிட் - 19 சவால் உட்பட்ட விடயங்களில் இரண்டு நாடுகளின் உரிய அதிகாரிகள் ஒழுங்கு முறையான தொடர்பாடலை பேண வேண்டும் என இருவரும் இணங்கினர்.

"இந்தியாவின் அண்டை நாடுகளுக்கான முக்கியத்து- வத்தை இலங்கை முதன் நாடாக உள்ளது என்பதை பிரதமர் மோடி மீண்டும் வலியுறுத்தினார்."

- இப்படி இந்தியப் பிரதமரின் அலுவலகச் செய்திக் குறிப்புத் தெரிவித்தது. (உ)

# அதியுச்ச அதிகாரப் பகிர்வுடன் தமிழர்களுக்கு அரசியல் தீர்வு

## இந்தியாவின் நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை; கூட்டமைப்புடனான பேச்சில் தூதுவர் தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் இடையில் யாழ்ப்பாணத்தில் இன்று காலை 9.30 முதல் சுமார் ஒரு மணி நேரம் முக்கிய பேச்சு இடம் பெற்றது.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், சி.சிறிதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

அரசியல் மற்றும் அபிவிருத்தி விடயங்கள் தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டன.

இலங்கை அரசியலில் இந்தியாவின் நிலைப்பாடு ஒருபோதும் மாறாது எனவும், அதியுச்ச அதிகாரப் பகிர்வுடன் தமிழ் மக்களுக்குத் தீர்வு வழங்கப்பட வேண்டும் எனவும் இந்தியத் தூதுவர் தெரிவித்தார்.

தலைமன்னார் - இராமேஸ்வரம் கப்பல் சேவையை விரைவில் ஆரம்பிப்பது தொடர்பாகவும் பேசப்பட்டது.

ஏற்கனவே மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுக்கு அமைவாக அதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும் என்கின்ற கோரிக்கைக்கு விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, தலைமன்னார் - இராமேஸ்வரம் கப்பல் சேவை வெகுவிரைவில் இடம்பெறும் என்று இந்தியத் தூதுவர் இதன்போது கூறினார்.

# யார் விமர்சித்தாலும் கூட பிரேரணை நிறைவேறும்!

## சம்பந்தன் அதீத நம்பிக்கை

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை மீது திருத்தங்களுடன் முன் வைக்கப்பட்டுள்ள பிரேரணை வரைவு கனதியாகவே உள்ளது. இதை விமர்சிப்பவர்கள் விமர்சிக்கட்டும். ஆனால், இந்த வரைவு ஐ.நா. உறுப்புரிமை நாடுகளின் ஆதரவுடன் நிறைவேறியே தீரும். இது எமது அசைக்க முடியாத நம்பிக்கை.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினைகள், அரச படைகளால் தமிழ் மக்கள் மீது இழைக்கப்பட்ட கொடூரங்கள் ஆகியவற்றுக்கு தீர்வு காணும் வகையில் ஐ.நா. பிரேரணையின் புதிய வரைவில் பரிந்துரைகள் முன்மொழியப்பட்டுள்ளன.

பிரிட்டன் தலைமையில் முன்வைக் கப்பட்டுள்ள இந்தப் பிரேரணைக்கு பல நாடுகள் ஆதரவு வழங்க முன்வந்துள்ளன.

பல நாடுகளின் தூதுவர்களுடன் நாம் பேச்சுக்களை நடத்தி பிரேரணைக்கு ஆதரவு வழங்குமாறும் கோரியுள்ளோம். அதேவேளை, பிரேரணைக்கு ஐ.நா. உறுப்புரிமை நாடுகளின் ஆதரவைக் கோரி பகிரங்க அறிக்கையொன்றையும் நாம் வெளியிட்டுள்ளோம்.

எனவே, இந்த வரைவு உறுப்புரிமை நாடுகளின் ஆதரவுடன் நிறைவேறியே தீரும். இது எமது அசைக்க முடியாத நம்பிக்கை - என்றார்.

# புர்காவுக்குத் தடை!

## அமைச்சரவைப் பத்திரத்தில் சரத் வீரசேகர கையெழுத்து

இலங்கையில் பொது இடங்களில் முகத்தை மறைக்கும் 'புர்கா' அணிவதைத் தடைசெய்வதற்கான அமைச்சரவைப் பத்திரத்தில் தான் கையெழுத்திட்டுள்ளார் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

களுத்துறை பிரதேசத்தில் இன்று காலை நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதேவேளை, இலங்கையில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பதிவு செய்யப்படாத மதரஸா பாடசாலைகள் இருக்கின்றன என்றும், அவை முறையாகக் கட்டுப்படுத்தப்படாமையால் எதிர்காலத்தில் அவற்றை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் அமைச்சர் இதன்போது குறிப்பிட்டார்.

அத்துடன் நாட்டில் 5 முதல் 16 வயதுக்கு உட்பட்ட அனைத்துப் பிள்ளைகளும் தேசிய கல்வித் திட்டத்தின் கீழ் கல்வியைப் பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகும் என்றும் அவர் மேலும் கூறினார்.

# எமது குடும்பத்துக்குள் குழப்பத்தை உருவாக்க சிலர் முயற்சிக்கின்றனர்

## கோட்டாபய ராஜபக்ஷ கவலை

பல்வேறு தரப்பினர்கள் தமது குடும்பத்தில் குழப்பங்களை உருவாக்க முயற்சிக்கின்றனர் என்று தெரிவித்துள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அவ்வாறு இந்தக் குடும்பத்துக்குள் யாராலும் குழப்பங்களை ஏற்படுத்திவிட முடியாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களைக் கொண்ட மாகாண சபை மன்றத்துடன் நடத்தப்பட்ட கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மஹிந்த ராஜ பக்ஷ நமக்கு மட்டுமல்ல, முழு ஆசியாவிலும் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவர் என்பதனை அனைவரும் அறிவர். அவருடைய அரசியல் அறிவையாரும் நெருங்க முடியாது. அத்தகைய தலைவர் ஒருவர் நாட்டை வழிநடத்துவது ஒரு பெரிய பாக்கியம் என்று நான் கருதுகிறேன்.

அதேபோன்று, பஸில் ராஜபக்ஷ இந்த நாட்டில் ஓர் அரசை உருவாக்கிக் கொடுப்பதில் முன்நின்று செயற்பட்டார் என்பதையும் ஒப்புக்கொள்ள வேண்டும். அத்தகைய இரண்டு தலைவர்களுடன் அரசை முன்னெடுத்துச் செல்வது மிகவும் எளிதானது.

இதேவேளை, நான் வழங்கும் நியமனங்களில் மஹிந்த ராஜபக்ஷ ஒருபோதும் அழுத்தங்களைக் கொடுத்ததில்லை. அதேபோன்று பஸில் ராஜபக்ஷவும் அந்த விடயங்களில் தலையிட்டதில்லை. இவர்களின் ஒத்துழைப்புடன் நாட்டை எந்தவாரு நெருக்கடியும் இல்லாமல் முன்நோக்கிக் கொண்டு செல்வோம் என்று தைரியமாகக் கூறுகின்றேன் - என்றார்.

**வீடும் காணியும் விற்பனைக்கு**

துன்னாலை மத்தி கோவிற் கடவையில் கட்டுக் கிணறு வசதியுடன் நான்கு பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.

★ விலை 35 லட்சம்.

தொடர்பு:-0779690990

# பழிவாங்குவது என்பது மனிதனை மிருகமாக்கும் குணம்




தனக்கு ஒரு கண் போனால், எதிரிக்கு இரண்டு கண்ணும் போகவேண்டும் என்று நினைப்பவர்கள் நமக்கு மிக அருகில் கூட இருப்பார்கள்.

பழிவாங்குவது என்பது மனிதனை மிருகமாக்கும் குணம். பயம், கோபம், வெறுப்பு ஆகியவையே இந்த பழி வாங்கலின் பின்னால் ஒளிந்து கிடக்கும் தீய உணர்வுகளாகும்.

நமது எண்ணங்களில் ஏற்படும் அபிப்பிராய பேதமே மற்றவர்களை தப்பாக புரிந்து கொள்ள வைக்கிறது. நமக்குத் தேவையானவர் என்றால் நாம் அணுகும் விதம் வேறாக இருக்கிறது, நமக்கு தேவையற்றவர் என்றால் நாம் அணுகும் விதம் இன்னும் வேறுபடுகிறது.

பணக்காரரை, படித்தவரை ஒரு கோணத்திலும், படிக்காதவரை, ஏழையை ஒரு கோணத்திலும் நாம் பார்க்கிறோம். பார்க்கும் கோணத்தை நாமே மாற்றி வைத்துக் கொண்டு, தவறான அபிப்பிராயம் கொள்கிறோம். இந்த பேதமே பயமும், வெறுப்பும் உருவெடுக்க அடிப்படைக் காரணமாகும். இது நாளடைவில் கோபத்தை கூட்டி பழிவாங்கலைத் தூண்டி விடும்.

மேலதிகாரி பற்றி தப்பெண்ணம் எழுந்தால் அவர் மீது பயமும், வெறுப்பும் சேர்ந்து வரும். பிறகு கோபமும் தொற்றிக் கொள்ளும். எளியோரிடம் அபிப்பிராய பேதம் ஏற்பட்டால் நேரடியாக கோபமே வந்துவிடும். இந்த மூன்று தீய உணர்வுகளில் எது தொற்றினாலும் ஒன்று மற்றொன்றை துணைக்கு அழைத்து உங்களை பழிவாங்கும் மிருகமாக மாற்றி விடும்.

பழிவாங்கலை கவனித்துப் பார்த்தால் ஒரு விடயம் நன்றாகப் புரியும். நாம் நம்மைவிட பலவீனமானவர்களை மட்டுமே பழிவாங்க முயல்கிறோம். வலிமையானவர்கள் முன்பு நாம் பலவீனமாக இருந்து விடுகிறோம். ஆட்சியாளர்கள், அதிகாரிகள், பெற்றோர் என்று நம்மைவிட பலம் மிகுந்தவர்களை நாம் எப்போதும் எதிர்ப்பதில்லை. ஏனெனில் அதற்கு பின்விளைவுகள், பாதிப்புகள் ஏற்படலாம். அதனால் அதிகம் எதிர்க்காமலேயே நாம் வலியையும் காயத்தையும் தாங்கிக் கொள்கிறோம். ஆனால் எளியவர் நம்மிடம் சிக்கினால் அல்லது நமக்கு வசதியான சமயம் கிடைத்தால் மட்டும் பழி வாங்கக் கிளம்பிவிடுகிறோம்.

வெறுப்பு ஏற்படும்போதும், பழி வாங்கும்போதும் நம் உடலில் தோன்றும் விஷம் நம்மை சிறிது சிறிதாக கொல்வதாக மருத்துவ ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. ஆழப் புதைந்த வெறுப்பினால் மன அழுத்தம் ஏற்படுவதாகவும், படபடப்பு, வயிற்றுப்புண், நரம்புத் தளர்ச்சி, இதய நோய்கள் போன்றவை அடக்க முடியாதகோபம், பழிவாங்கும் வெறி போன்றவற்றால் தூண்டப்படுகின்றன என்றும் ஆய்வுகள் கூறுகின்றன.

பழ வாங்கும் உணர்ச்சியால் நாம் நமது வேலை செய்யும் திறனை இழந்து, பழி வாங்குதலிலேயே காலத்தையும், வாழ்வையும் வீணாக்கி விடுகிறோம். பழிவாங்குவதால் உறவுகளும் பாதிக்கும். ஒரு குடும்பச் சண்டை தந்தையிடமிருந்து மகனுக்கும், அவனிடம் இருந்து அவனது மகனுக்கும் பரவுகிறது. கொஞ்சம் மிச்சமிருக்கும் நல்ல எண்ணத்தையும் இந்த பழிவாங்கும் எண்ணம் அழித்து விடுகிறது.

ஆழ்ந்து யோசித்தால் பழி வாங்குவது என்பது நமது தகுதியிலிருந்து கீழிறங்கும் செயல் என்பது புரியும். உயர்ந்த இலட்சியங்கள் உடையவர்கள் பழி வாங்குவதில்லை.

கடவுளும், நம்மால் காயம்பட்டவர்களும் நம்மை மன்னித்து ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். ஆனால் நாம் மட்டும், யாரையும், எதையும் மன்னிக்கத் தயாராக இல்லை. இப்படி இரட்டைத் தரங்களில் செயல்பட்டால் நமக்கு பழி சேராமல் நல்ல கதியா கிடைக்கும்?

'கண்ணுக்கு கண்' கொள்கையை கண்களைத் திறந்துகொண்டே பின்பற்றினால் 'இந்த உலகமே குருடாகிவிடும்' என்று சொல்வார்கள். 'பழிவாங்க வேண்டுமானால் நாம் மன்னிக்க வேண்டும். மன்னிப்பதால் மட்டுமே நீங்கள் எதிரியையும் அடிமையாக்க முடியும்' - என்பது மகான்களின் வாக்கு.

## நம் எண்ணங்களுக்கு நம்மைவிட அதிக பலம் இருக்கிறது



அது வாழ்க்கையில் நிறைவாக வாழ்வது, அடுத்தவர்க்கு வழிகாட்டியாய் இருப்பது, பிற உயிர்களை மதிப்பது அவற்றிற்கு துன்பம் கொடுக்காமல் இருப்பது, ஆக மொத்தம் சந்தோமாக வாழ்வதும் நம்மை சுற்றி உள்ளவர்களை மகிழ்ச்சியாக வைத்துக்கொள்வதும்தான் வெற்றிகரமான வாழ்க்கை.

இந்த வெற்றியை அடைய நாம் நம்மை தயார் படுத்திக் கொள்வது அவசியம். உடலும், மனதும் தூய்மையாக இருப்பின் நாம் நினைக்கின்ற எந்த காரியத்தையும் செய்து முடிக்கும் வலிமையும், வழியும் தானாக பிறக்கும். எந்த ஒரு செயலை எடுத்துக் கொண்டாலும் அது வெற்றி பெற முதலில் அந்த செயல் குறித்த புரிதல் அவசியம். பின் அதற்கான திட்டமிடல் முக்கியம். இவை இரண்டும் இருந்து விட்டால் பின் தைரியமாக செயலில் இறங்கலாம்.

சிலர் தனியாக தொழில் செய்து அது நஷ்டமடையும்போது, தன்னைத்தானே நொந்துகொள்வார்கள். நமக்கு நேரம் சரியில்லை, எல்லாம் என் தலைவிதி, எனக்கு எதுவும் சரியாக அமையாது என்று புலம்புவார்கள். இப்படி புலம்புவது எந்த வகையிலும் சரியாகாது. இது மனதிற்கு இன்னும் சோர்வையே ஏற்படுத்தும். இன்னொருமுறை முயற்சிக்கும் எண்ணத்திற்கும் தடையாக இருக்கும். எனவே தோல்வி ஏற்படும்போது, அதை இயல்பாக எடுத்துக்கொள்ள பழக வேண்டும் மன கஷ்டங்கள் இருந்தாலும் மனதிற்குள் நல்ல எண்ணங்களாகவே நினைக்க வேண்டும்.

ஏதோ இந்தமுறை சரியாக வரவில்லை அடுத்த முறை இப்படி நடக்காது என்று தனக்குத்தானே தைரியம் சொல்வதுபோல் நினைக்க வேண்டும். நம் எண்ணங்களுக்கு நம்மைவிட அதிக பலம் இருக்கிறது. இது ஏதோ ஊக்கப்படுத்தும் தத்துவம் என்று நினைக்காதீர்கள், இது விஞ்ஞான பூர்வமாக நிரூபிக்கப்பட்ட உண்மை. எனவே எண்ணங்களை எப்போதும், நேரானதாக வைத்துக்கொள்வது மிக மிக முக்கியம். அதுவே வெற்றிக்கான சிறந்த வழி.

## அனைத்துப் பிரச்சினைகளுக்கும் ஒரே தீர்வு விவாகரத்துதானா?



கணவன் - மனைவி இடையே ஏற்படும் எல்லா பிரச்சினைகளுக்கும் ஒரே தீர்வு விவாகரத்து தான் என்று இப்போது பலரும் பேசத் தொடங்கியிருக்கிறார்கள். அதற்கு மாற்றாக வேறு எதைப் பற்றியும் சிந்திக்க அவர்களுக்கு நேரமில்லை என்கிறார்கள். இந்த கால கணவனும், மனைவியும் தங்களுக்குள் ஏற்படும் சிக்கல்களை அலசி, ஆராய்ந்து தீர்வு காணும் மனநிலையில் இல்லை.

ஆண், பெண் இருவரும் சரிசமம் என்று சொல்லிக் கொண்டு அசுர வேக வளர்ச்சியை காட்டும் இன்றைய தலைமுறையினரிடம் தங்கள் வாழ்க்கையில் ஏற்படும் எந்த ஒரு சிக்கலுக்கும் சரியான தீர்வு காணும் பொறுமை இல்லை. தற்போதைய காலகட்டத்தில் விவாகரத்து என்பது எளிதாக கிடைத்து விடும் என்ற கருத்து நிலவுகிறது.

ஆனால் விவாகரத்துக்குப் பிறகு வாழும் வாழ்க்கை மிகவும் கொடுமையானது. அதைப் பற்றி யாரும் யோசிப்பது இல்லை. கையில் பணம் இருந்தால் எதையும் சாதித்து விடலாம் என்ற மனோபாவத்தில் விவாகரத்து முடிவு எடுக்கப்படுகிறது. ஆனால் அது உண்மையில்லை என்பதை உணரும்போது, வாழ்க்கையே முடிந்து போய் இருக்கும்.

தவறுகளே செய்யாத மனிதர்கள் இல்லை. அதை திருத்திக் கொள்ளும் முயற்சி தான் வாழ்க்கை. திருமணத்துக்கு முன் செய்யும் தவறுகளுக்காக பெற்றோர் பிள்ளைகளை தூக்கி எறிவது இல்லை. ஆனால் திருமணத்துக்கு பிறகு செய்யும் ஒவ்வொரு தவறுக்கும் கணவன், மனைவி இருவரில் யாராவது ஒருவரைத் தூக்கி எறியும் முடிவுக்கு இன்னொருவர் வந்துவிடுகிறார்.

திருமணத்துக்கு முன்பு - திருமணத்துக்கு பின்பு என்று ஒருவருடைய வாழ்க்கையை இரண்டாக பிரித்துப் பார்த்த காலம் போய், இப்போது விவாகரத்துக்கு முன்பு - பின்பு என்று பிரித்துப் பார்க்கிறார்கள். அதில் பிந்தைய காலம் அனேகமாக பெண்களுக்கு இருண்ட காலம் ஆகிவிடுகிறது.

ஆண்களும் விவாகரத்துக்கு பிறகு அதிகமான மனநெருக்கடிக்கு உள்ளாகி விடுகிறார்கள். இதனால் அவர்களுடைய தொழில் பாதிப்படைகிறது. 'தன்னைப் பற்றி தனக்கு பின்னால் என்ன பேசிக்கொள்வார்களோ!' என்ற எண்ணம் அவர்களுடைய நட்பு வட்டாரத்தை குறைக்கிறது அல்லது சிதைக்கிறது. அப்போது, தான் செய்யும் சின்னச் சின்ன தவறுகள் கூட, பெரிய வடிவத்தில் தன் கண்முன்னே வந்து நிற்கும். அந்த நேரத்தில் தன்மீதே தனக்கு கோபமும், டென்ஷனும் ஏற்பட்டு மன அழுத்தம் எல்லைமீறும். இதனால் வாகனத்தை வேகமாக ஓட்டி தாறுமாறாக செல்வது, மது அருந்துவது, உறவுகளை புறக்கணிப்பது என்று முரண்பாடான பாதையில் பயணிக்க தொடங்கிவிடுவார்கள்.

அப்போது அவரது மாண்பும், மரியாதையும் சிறிது சிறிதாக அவருடைய வாழ்க்கையில் இருந்து விடைபெற்று சென்றுகொண்டே இருக்கும். இந்த இழப்பை பணத்தாலும், பதவியாலும் ஈடுசெய்ய முடியாது என்பதை உணரும்போது, வாழ்க்கையில் தவறு செய்து விட்டதை புரிந்து கொள்வார்கள். ஒரு மனிதன் தன் தவறுகளை உணர்ந்து திருந்தினால் தவிர வாழ்க்கை அவன் வசப்படாது.

# இரணைதீவைப் புதைகுழியாக்கும் முயற்சிக்கு யாழ் மறைமாவட்ட கத்தோலிக்கர்கள் எதிர்ப்பு

## பங்குத் தந்தை மடுத்தீன் பத்திநாதர் அடிகளார் தெரிவிப்பு




இரணைதீவில் கொரோனாத் தொற்றால் இறக்கும் முஸ்லிம் மக்களின் உடல்களை (ஜனாஸாக்களை) அடக்கம் செய்ய அரசு எடுத்த முடிவு ஏற்றுக்கொள்ள முடியாததும் கண்டிக்கப்பட வேண்டியதுமாகும் என இப்பகுதிக்குப் பொறுப்பாகவுள்ள முழங்காவில் பங்குத்தந்தை மடுத்தீன் பத்திநாதர் அடிகளார் காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழுக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கும் போது இந்த முடிவை எடுக்க முன்னர் இந்த ஊரின் தலைவர்களிடமும், இந்த ஊர் 100 வீதம் கத்தோலிக்கர் வாழும் ஊர் என்கின்ற வகையில் இவர்களுக்காக என்றும் உழைக்கும் பங்குத்தந்தையிடமும், எல்லாவற்றிற்கும் மேலாக அனைத்திற்கும் பொறுப்பான யாழ் ஆயரிடமும் கேட்டிருக்க வேண்டும்.

இறக்கும் முஸ்லிம் மக்களின் உடல்களை (ஜனாஸாக்களை) இங்கு அடக்கம் செய்வதை முஸ்லிம் மக்களே விரும்பவில்லை. இவ்வூரின் மக்கள் கடற்தொழில் செய்பவர்கள். இரணை தீவு பாரிய புதைகுழியாக மாறும் பட்சத்தில் இம்மக்கள் தம் தொழிலைக் கைவிடவும் வாய்ப்புள்ளது. எனவே அரசின் இம்முடிவு ஏற்புடையதன்று என கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் சுட்டிக் காட்டியுள்ளார். அரசின் இந்த முடிவை இந்த ஊர் நூறுவீதம் கத்தோலிக்கர் வாழும் ஊர் என்கின்ற வகையில் யாழ் மறை மாவட்டக் கத்தோலிக்க மக்கள் அனைவரும் வன்மையான எதிர்க்கின்றனர். – என்றார்.



# 33 ஆவது வெளிநாட்டுத் திருத்தூதுப் பயணம் ஈராக் நாட்டில் நிறைவு செய்தார் திருத்தந்தை

திருத்தந்தை பிரான்சிஸ் 05 மார்ச் முதல் 07 மார்ச் 2021 காலப்பகுதியில் ஈராக் நாட்டில் தனது 33ஆவது வெளிநாட்டு திருத்தூதுப் பயணத்தை மேற்கொண்டு 08 மார்ச் அன்று வத்திக்கான் திரும்பினார்.

உரோம் நேரம் பகல் 12.44 மணியளவில் உரோம் சம்ப்பினோ விமானத்தளத்தில் வந்திறங்கிய திருத்தந்தை வத்திக்கானுக்குத் திரும்பும் வழியில் உரோம் மேரி மேஜர் பெருங்கோவில் சென்று அன்னை மரியாவிற்கு மலர்கள் சாற்றி நன்றி தெரிவித்தார்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் மார்ச் 08 அன்று உள்ளூர் நேரம் காலை 07 மணிக்கு பாக்தாத் திருப்பீடத் தூதரகத்தில் விசுவாசிகளின் பங்கேற்பின்றி திருப்பலி நிறைவேற்றினார். பின்னர் அந்த திருப்பீடத் தூதரகத்தில் இந்நாள்களில் தனக்கு நல்வரவு அளித்து கவனித்துக் கொண்ட ஏறத்தாழ முப்பது பேருக்கு நன்றி சொல்லி ஆசீர் அளித்தார். இத்திருத்தூதுப் பயணத்தைக் குறிக்கும் கலைவேலைப்பாடுகள் நிறைந்த பதக்கம் மற்றும் மொசைக் வேலைப்பாடுகள் கொண்ட தன் தலைமைப் பணியின் இலச்சினை ஆகிய இரண்டையும் அவ்வில்லத்திற்குப் பரிசாக அளித்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

பாக்தாத் திருப்பீட தூதரகத்திலிருந்து குண்டுதுளைக்காத கறுப்புநிற காரில் பாக்தாத் விமானத்தளம் சென்ற திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை ஈராக் அரசுத் தலைவர் அவர்களும் அவரது துணைவியாரும் வரவேற்றனர். விமான நிலையத்தின் முக்கிய விருந்தினர் அறையில் இவர்களோடு சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்த திருத்தந்தை பிரான்சிஸ். பின்னர் திருத்தந்தையை உரோம் நகருக்கு அழைத்து வருவதற்காக காத்திருந்த யு330 ஆல் இத்தாலியா விமானம் வரை சிவப்பு கம்பள விரிப்பில் அழைத்துச் செல்லப்பட்டார்.



இந்த விமானப் பயணத்தில் துருக்கி – கிரேக்கம் – அல்பேனியா – இத்தாலி ஆகிய நாடுகளின் வான்பரப்பில் விமானம் பறந்துசெல்கையில் அந்நாடுகளின் அரசுத்தலைவர்களுக்கு செபமும், வாழ்த்தும் கலந்த தந்திச் செய்திகளை அனுப்பவும் திருத்தந்தை மறக்கவில்லை. ஈராக் அரசுத் தலைவர் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை வழியனுப்பி வைத்துவிட்டு தன் டுவிட்டர் பக்கத்தில் திருத்தந்தைக்கு நன்றி சொல்லி செய்தி ஒன்றையும் பதிவுசெய்துள்ளார்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் பாக்தாத் – நசாப் – ஊர் – நினிவே – எர்பில் ஆகிய பகுதிகளில் நம் விருந்தினராக இருந்தார். நம் நாட்டுடன் தோழமையுணர்வு மற்றும் மனிதாபிமானம் நிறைந்த மிகப்பெரும் செய்தியைக் கொண்டுவந்துள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை வாழ்த்துவோம். அமைதி மற்றும் அன்பின் அடையாளமான அவரது பிரசன்னம் அனைத்து ஈராக்கியர்களின் இதயங்களில் என்றென்றும் நிலைத்திருக்கும்! – என்ற சொற்கள் ஈராக் அரசுத் தலைவரின் டுவிட்டர் செய்தியில் வெளியாயின.

காலைக்கதிர் Kalaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ்
TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி – யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்

# திருஅவையின் தலைமைப் பணியில் திருத்தந்தை பிரான்சிஸ் 8 ஆண்டுகள்

2013ஆம் ஆண்டு மார்ச் 13ஆம் திகதி கத்தோலிக்கத் திருஅவையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நேற்று 13 மார்ச் 2021 அன்று தனது பாப்பிறை தலைமைப் பணியில் எட்டு ஆண்டுகளை நிறைவு செய்தார்.

அமெரிக்காவிலிருந்தும் இயேசு சபையிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் திருத்தந்தையான இவர் கடந்த எட்டு ஆண்டுகளில் நாம் திருஅவையை நோக்கும் முறையை முழுவதுமாக மாற்றியுள்ளார். அவரது முதல் நற்செய்தியின் வார்த்தைகள் கோட்பாடுகள் பற்றியோ சட்டங்கள் பற்றியோ அல்ல, மாறாக அவை கடவுளின் பரிவன்பு மற்றும் இரக்கம் பற்றியதாக இருந்தன. ஏழைகள், சமுதாயத்தின் விளிம்பு நிலையில் வாழ்வோர், புலம்பெயர்ந்தோர், வீடற்றோர் மற்றும் நோயாளிகளுக்கு பரிவன்பைக் காட்டுவதாக உள்ளது.

நாம் கிறிஸ்தவ நம்பிக்கையை எவ்வாறு புரிந்துகொள்கிறோம் என்பதைவிட எவ்வாறு அதை வாழ்கிறோம் என்பதில், திருத்தந்தை மிகுந்த ஆர்வமாக இருக்கிறார். திருஅவையின் வரலாற்றில் முதன் முறையாக தனக்கு ஆலோசனை வழங்க ஒன்பது பேர் கொண்ட கர்தினால்கள் அவையை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் உருவாக்கியுள்ளார்.

# ஈராக்கில் கிறிஸ்தவ மக்களின் எண்ணிக்கை 2003இல் 14 லட்சம்; இன்று சில ஆயிரங்கள்

## திருத்தந்தையின் ஈராக் பயணம் பற்றி கருத்து

கொவிட் – 19 பெருந்தொற்று உலகெங்கும் பரவியதைத் தொடர்ந்து திருத்தந்தையின் வெளிநாட்டுப் பயணங்கள் கடந்த 15 மாதங்களாக நடைபெறவில்லை என்பதைத் தமது நேர்காணலின் தொடக்கத்தில் கூறியுள்ள கர்தினால் பரோலின் அவர்கள் ஈராக் நாட்டிற்கு திருத்தந்தை ஒருவர் செல்வது வரலாற்றில் இதுவே முதல் முறை என்பதையும் குறிப்பிட்டுள்ளார்.

பல்வேறு பிரச்சினைகளால் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை பெருமளவு குறைந்துவரும் ஈராக் நாட்டிற்கு திருத்தந்தை செல்வது அந்நாட்டின் மீது கத்தோலிக்கத் திருஅவை கொண்டுள்ள அக்கறையைக் காட்டுகிறது என்றும், இது இப்பயணத்தின் முக்கிய நோக்கம் என்றும் கர்தினால் பரோலின் அவர்கள் சுட்டிக்காட்டினார்.

கடந்த 20 ஆண்டுகளாக ஈராக் நாட்டில் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை குறைந்து வந்துள்ளது என்று கூறும் வத்திக்கான் செய்தித்துறை, அரசுத் தலைவர் சதாம் ஹுசைன் பதவி நீக்கப்படுவதற்கு முன்னர் – அதாவது 2003ஆம் ஆண்டு – ஏறத்தாழ 14 லட்சமாக இருந்த கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை தற்போது ஒரு சில ஆயிரங்களாகவே உள்ளது என்று கூறியுள்ளது.

தன்னை மீண்டும் கட்டியெழுப்பி வரும் ஈராக் நாட்டில் கிறிஸ்தவர்கள் உட்பட அனைவருக்கும் அக்கறையும் சம உரிமைகளும் உள்ளன என்பதைத் திருத்தந்தையின் திருத்தூதுப் பயணம் வலியுறுத் தும் என்று கர்தினால் பரோலின் அவர்கள் எடுத்துரைத்தார்.

# துயரத்தைப் பகிர்ந்த அனைவருக்கும் நன்றி தெரிவிக்கின்றார் யாழ் ஆயர்

தனது சகோதரரின் மறைவு ஒட்டி துயரத்தைப் பகிர்ந்த அனைவருக்கும் நன்றி தெரிவிக்கின்றார் யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பரகாசம் ஆண்டகை.



“எனது அன்புச் சகோதரர் டொக்டர் கிறிஸ்ரி நவநீலன் ஞானப்பிரகாசம் (வயது 69) அவர்கள் கனடா ரொறென்ரோவில் திடீர் மரணம் அடைந்த துக்கச் செய்தி கேட்டு எனது துன்பத்தில் கலந்து கொண்டு பல வழியாலும் அனுதாபங்களைத் தெரிவித்து துயர் பகிர்வுச் செய்திகள் அனுப்பிய அனைவருக்கும் எனது அன்பான நன்றிகள். குறிப்பாக யாழ் மறை மாவட்டக் குருக்கள், துறவியர், இறைமக்கள் மற்றும் இந்து மத அன்பர்கள் அனைவரையும் நன்றியோடு நினைவு கூருகிறேன். டொக்டர் கிறிஸ்ரி நவநீலன் ஞானப்பிரகாசம் அவர்கள் இறைவனின் இன்ப சந்நிதானத்தில் அமைதியில் இளைப்பாறவும் அவரின் குடும்பத்தார் இறை சித்தத்தை ஏற்று இத்துன்பத்தைத் தாங்கி வாழ்வும் இறை வரம் வேண்டுங்கள்.” – என்று யாழ் ஆயர் தமது செய்தியில் தெரிவித்துள்ளார்.

யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் சகோதரர் டொக்டர் கிறிஸ்ரி நவநீலன் ஞானப்பிரகாசம் (வயது 69) அவர்கள் கனடாவில் 25 பெப்ரவரி 2021 அன்று இறைபதம் அடைந்து, அவரின் இறுதிச் சடங்குகள் 27 பெப்ரவரி 2021 அன்று கனடாவில் நடைபெற்றமை பற்றி காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் அன்பு நெஞ்சங்களுக்கு அறியத் தந்தோம். டொக்டர் கிறிஸ்ரி நவநீலன் ஞானப்பிரகாசம் அவர்களின் ஆன்மா இறைவனின் இன்ப சன்நிதானத்தில் அமைதியில் இளைப்பாற நாட்டு நிலைமை காரணமாக ஆயருடன் குருக்கள் மட்டும் இணைந்து யாழ் ஆயர் இல்லத்தில் 08 மார்ச் அன்று திருப்பலி ஒப்புக்கொடுத்து இறை வரம் வேண்டினர்.

இவரின் பிரிவால் துயருறும் அன்பு மனைவி டொக்டர் றாக்கேல், பிள்ளைகள் தனியா மற்றும் அன்ரனி மற்றும் உறவினருக்கு காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் அன்பு நெஞ்சங்களின் அனுதாபங்களைத் தெரிவிக்கிறோம். இவரின் ஆன்மா அமைதியில் இளைப்பாற செபியுங்கள்.

– கிறிஸ்தவ செய்தி இதழ் ஆசிரியர்

## மணமகன் தேவை

1.1989, யாழ்.கத்தோலிக்க வேளாளர், விசாகம், Teacher, கொழும்பு, பதிவு: 5254 Ensured Quality Lanka, Bambalapity.
பதிவுக்கு:- www.EQMarriageService.com.
தொடர்புகளுக்கு - 076 664 9401

2.1986, யாழிந்து வேளாளர், கேட்டை, Manager, கொழும்பு, பதிவு: 5325, Ensured Quality Lanka, Bambalapity.
பதிவுக்கு:- www.EQMarriageService.com.
தொடர்புகளுக்கு - 076 664 9401

3.1993, யாழிந்து வேளாளர், திருவாதிரை, MBBS, வவுனியா, பதிவு: 5339, Ensured Quality Lanka, Bambalapity.
பதிவுக்கு:- www.EQMarriageService.com.
தொடர்புகளுக்கு - 076 664 9401

4.1988, யாழிந்து இந்து, உத்திரட்டாதி, Software Engineer, கொழும்பு, பதிவு: 5347, Ensured Quality Lanka, Bambalapity.
பதிவுக்கு:- www.EQMarriageService.com.
தொடர்புகளுக்கு - 076 664 9401

5.1986, யாழிந்து வேளாளர், உத்தரம், D.O, தென்மராட்சி, பதிவு: 5410, Ensured Quality Lanka, Bambalapity.
பதிவுக்கு:- www.EQMarriageService.com.
தொடர்புகளுக்கு - 076 664 9401

6.1990, யாழிந்து வேளாளர், உத்திராடம், Bank கொழும்பு, பதிவு: 5430, Ensured Quality Lanka, Bambalapity.
பதிவுக்கு:- www.EQMarriageService.com.
தொடர்புகளுக்கு - 076 664 9401

7.1994, யாழிந்து வேளாளர், புனர்பூசம், I.T Enginee,r கொழும்பு, பதிவு: 5440, Ensured Quality Lanka, Bambalapity.
பதிவுக்கு:- www.EQMarriageService.com.
தொடர்புகளுக்கு - 076 664 9401

8.1989, யாழ்.கத்தோலிக்க வேளாளர், புனர்பூசம், Bank, கொழும்பு, பதிவு: 5461, Ensured Quality Lanka, Bambalapity.
பதிவுக்கு:- www.EQMarriageService.com.
தொடர்புகளுக்கு - 076 664 9401

9.1975, யாழிந்து வேளாளர், புனர்பூசம், Bank Asst.Manager, திருகோணமலை, பதிவு: 5484, Ensured Quality Lanka, Bambalapity.
பதிவுக்கு:- www.EQMarriageService.com.
தொடர்புகளுக்கு - 076 664 9401

10.1979, யாழிந்து வேளாளர், அவிட்டம், Teacher, கிளிநொச்சி, பதிவு: 5541, Ensured Quality Lanka, Bambalapity.
பதிவுக்கு:- www.EQMarriageService.com.
தொடர்புகளுக்கு - 076 664 9401

11.1993, யாழிந்து நளவர், ஸ்வாதி, Teacher, யாழ்ப்பாணம், பதிவு: 5557, Ensured Quality Lanka, Bambalapity.
பதிவுக்கு:- www.EQMarriageService.com.
தொடர்புகளுக்கு - 076 664 9401

12.1993, யாழிந்து வேளாளர், கேட்டை, Software Engineer, கொழும்பு, பதிவு: 5563, Ensured Quality Lanka, Bambalapity.
பதிவுக்கு:- www.EQMarriageService.com.
தொடர்புகளுக்கு - 076 664 9401

13.1985, யாழிந்து வேளாளர், திருவோணம், Executive, யாழ்ப்பாணம், பதிவு: 5249, Ensured Quality Lanka, Bambalapity.
பதிவுக்கு:- www.EQMarriageService.com.
தொடர்புகளுக்கு - 076 664 9401

14.1988, யாழிந்து வேளாளர், உத்திராடம், Lecturer, கொழும்பு, பதிவு: 5229, Ensured Quality Lanka, Bambalapity.
பதிவுக்கு:- www.EQMarriageService.com.
தொடர்புகளுக்கு - 076 664 9401

15.1993, யாழிந்து வேளாளர், பூசம் Teacher, கொழும்பு, பதிவு: 5224, Ensured Quality Lanka, Bambalapity.
பதிவுக்கு:- www.EQMarriageService.com.
தொடர்புகளுக்கு - 076 664 9401.

## திருமண சேவை

யாழ் இந்து கிறிஸ்தவ ஜாதகங்கள் உண்டு.உள்நாடுவெளிநாடுகளில்உள்ள வர்கள் பொருத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு - 077 621 3832
Email: thiriChelvam1964@gmail.com

## மணமகள் தேவை

பிறந்த திகதி - 04. 01.1988, மதம் - இந்து N,நட்சத்திரம் - புனர்பூசம் 4, கி.பா - 8, சூரி/செவ் - 6 இல், தகைமை - AL தொழில் - எலக்சரிசன் டோவா, எதிர்பார்ப்பு - ஓரளவு படித்த பெண்.

பிறந்த திகதி - 31.12.1987, மதம் - இந்து N, நட்சத்திரம் - கார்த்திகை 2, கி.பா - 45 சூரி/ செவ் - 10 இல், தகைமை - AL, தொழில் - காவல் துறை உத்தியோகத்தர், எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகள்.
தொடர்புகளுக்கு - 077 197 1667

கனடாவில் வாழும் 27 வயது 2 இல் சூரியன் செவ்வாய் கேட்டை நட்சத்திர இந்து வேளாளர் மணமகளுக்கு இலங்கையில் மணமகனை எதிர்பார்க்கிறோம்.
தொடர்புகளுக்கு - 076 527 1807

## வேலை வாய்ப்பு

O/L வர்த்தகப் பிரிவு பெண் வேலைக்கு தேவை (வேலை பழக விரும்பும் பெண்களும் தொடர்பு கொள்ளலாம்)
தொடர்புகளுக்கு:-077 552 7099

கணினி திருத்துவதற்கும் வேலை பழக விரும்பும் ஆண், பெண், இருபாலாரும் தேவை.
தொடர்புகளுக்கு:- 077 914 7472

தினசரி பத்திரிகைகள் வீடுகளுக்கு விநியோகிக்கக்கூடும்.
தொடர்புகளுக்கு - 077 292 6316

யாழில் இயங்கும் உணவகத்திற்கு வேலையாள்கள் தேவை.
தொடர்புகளுக்கு - 077 221 1677
021 222 2054

சி.சி.ரீ.வி கமரா பொருத்துதல், பராமரித்தல் மற்றும் முதற்தர கமராக்களை வாங்குவதற்கு அணுகவும்.
தொடர்புகளுக்கு - 077 473 6057

நாவற்குழியில் இயங்கும் தனியார் நிறுவனத்திற்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு 076 740 3814

## பழுது பார்த்து கொடுக்கப்படும்

சகல வகையான குளிர்சாதன பெட்டிகளும் பழுது பார்த்து கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு - 077 654 8613

## சேவைகள்

உங்கள் அடகு நகைகளை மீட்க உதவுவோம். பழைய நகைகள் கூடிய விலையில் வாங்கப்படும்.
தொடர்புகளுக்கு - 021 222 2552

பெண்களுக்கான திருமண வைபவ சாறி பிளவுஸ்களுக்கு ஆரிவோர்க் செய்து கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு - 077 332 1937, 076 610 9770

பழைய நகைகள் கூடிய விலைக்கு கொள்வனவு செய்யப்படும், தகுந்த ஆவணங்களுடன் வருகை தரவும்.
தொடர்புகளுக்கு:- 076 804 6048
திருநெல்வேலிச் சந்தி, திருநெல்வேலி

Laptop உதிரிபாகங்கள் பெற்று கொள்ளலாம் பாவித்த Laptop வாங்கப்படும், விற்கப்படும்.
தொடர்புகளுக்கு - 077 914 7472

கோயில் மாலை, கல்யாணமாலை, கல்யாண மாலை நச்சுரல், ஆண்டாள் மாலை, கொண்டை மாலை, மல்லிகை சரம், சடை நாகம் கொழும்பு மல்லிகை மாலை என்பவற்றைப் பெற்றுக்கொள்ளலாம். தொடர்புகளுக்கு -
077 210 0014, 076 834 4381

அனைத்து விதமான இசைக்கருவிகளும் மிகக்குறைந்த விலையில் வாங்க மற்றும் பழுது பார்க்க.
தொடர்புகளுக்கு - 021 222 4242
077 556 3030

## காணி தேவை

யாழ் நகரில் இருந்து மருதனார் மடத்திற்கு இடைப்பட்டதாக K.K.S வீதியில் வீதியோரத்தை அண்மித்ததாக காணி தேவை. தொடர்புகளுக்கு - 076 339 8819, 077 951 4699

## வீடு வாடகைக்கு தேவை

யாழ் நகர பகுதியில்பத்து அறைகளுடன் கூடிய வீடு வாடகைக்கு தேவை.
தொடர்புகளுக்கு - 077 007 2433

2 அறைகள் கொண்ட ஒரு சிறிய குடும்பத்திற்கு வாடகைக்கு மாத வாடகை 15, 000/=
தொடர்புகளுக்கு - 075 54 7001

1.கோண்டாவிலில் 8 அறைகள் 3 குளியல் அறைகளுடன் 2 பரப்பு காணியுடன் வீடு வாடகைக்கு உண்டு. மாதம் 30, 000/= முற்பணம் 3 லட்சம்.

2.தெகிவளையில் 2 அறைகள் குளியல் அறை கொண்ட மேல் மாடி வீடு வாடகைக்கு. மாத வாடகை 40, 000/= முற்பணம் 6 மாதம்.
100 மீற்றல் தூரத்தில் காலி தெகிவளை வீதி.

3. கந்தர்மடத்தில் 2 அறைகளுடன் குளியலறை வெளியே அமைந்த வீடு வாடகைக்கு மாத் 15,000/= முற்பணம் 2 லட்சம்.
தொடர்புகளுக்கு - 075 54 7001

## கடை வாடகைக்கு

ஆஸ்பத்திரி வீதிக்கும் கோவில் வீதி சந்திக்கும் இடையில் (10x12 SQ ft) கடை வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:-077 020 7073

யாழ்ப்பாணம் ஸ்டான்லி வீதியில் கடைத் தொகுதி வாடகைக்கு உண்டு. தொடர்புகளுக்கு:-077 477 9443, 076 141 9299

மானிப்பாய் வீதி ஐந்து சந்தியில் கடை தொகுதி வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு - 077 354 7789

கோப்பாய் (யாழ் பருத்தித் துறை வீதி நாவலர் பாடசாலை அருகில்) ஆசிரியர் கலாசாலைக்கு அண்மையில் பெண்களுக்கான தனி அறைகள் வாடகைக்கு உண்டு (பெண்களுக்கு மட்டும்)
தொடர்புகளுக்கு - 070 564 0975

வாகன தரிப்பிட வசதிகளுடன் 5 அறையும் 3 குளியலறையும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. (மாதம் 50,000/= முற்பணம் 3, 00 000/=)

கோண்டாவில் 2பரப்பு காணியில் 8 அறைகளுடன் 3 குளியறைகளுடன் புதிய வீடு வாடகைக்குண்டு. மாத வாடகை - 30,000/= முற்பணம் 3,00,000/=

திருநெல்வேலியில், குளியல் அறை தனியாக அமைந்த 2 அறைகள் கொண்ட வீடு வாடகைக் உண்டு. மாதம் 15,000/= முற்பணம் 200,000/=

யாழ் நகரில் கடை வாடகைக்கு 400 சதுரஅடி முற்பணம் 2 1/2 லட்சம், மாத வாடகை 25,000/=
யாழ் பிரதான வீதியில் அமைந்துள்ள வீடுகள், கடைகள் விலைக்குத் தேவை.
தொடர்புகளுக்கு - 076 361 4997
075 504 7001

## வீடு, காணி விற்பனைக்கு

கொழும்பு வெள்ளவத்தையில் அடுக்குமாடி குடியிருப்பில் சகல வசதிகளுடனும் கூடிய 2 அறை, 1 குளியலறை கொண்ட வீடு விற்பனைக்குண்டு.

பொரளையில் அடுக்குமாடி குடியிருப்பில் 650 Sq ft 2 அறைகள் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. பத்திரப் பதிவுகளுடன் 58 இலட்சம் (லிப்ட் வசதி வாகனத் தரிப்பிட வசதியில்லை) 25 வருட கால கட்டடம்.
தொடர்புகளுக்கு - 076 361 4997
075 504 7001

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதி ஐந்து சந்தியில் 1 1/2 பரப்பு காணி விற்பனைக்கு.
தொடர்புகளுக்கு 077 43 22836

தெல்லிப்பழை ஆஸ்பத்திரி பிரதான வீதிக்கு அண்மையில் 2.5 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. ஒரு பரப்பு 18 லட்சம். தொடர்புகளுக்கு 070 4317660

1.கொக்குவில் சாம்பியன் வீதியின் முகப்பாக 6.5 பரப்பு காணி விற்பனைக்கு, பிரித்தும் கொடுக்கபடும்.
2.மாம்பழம் சந்திக்கு 400 மீற்றர் தூரத்தில் கலந்து குளம் வீதயின் முகப்பாக 13/4பரப்பு காணி விற்பனைக்கு
3.கல்வியங்காடு பருத்தித்துறை வீதியில் 600 மீற்றர் தூரத்தில் 4 பரப்பு காணி விற்பனைக்கு பிரித்தும் கொடுக்கப்படும்.
4.யாழ் நகரப் பகுதியில் பிரதான வீதியின் முகப்பா 13/4 பரப்புக் காணி விற்பனைக்கு.
5.கல்வியங்காடு பகுதியில் 6 பரப்பு வயல் காணி விற்பனைக்கு உண்டு மொத்தமாக 24 லட்சம்.
6.கோப்பாயில் பருத்தித்துறை வீதிக்கு 300 மீற்றர் தொலைவில் 5.5 பரப்பு காணி விற்பனைக்கு. ஒரு பரப்பு 15 லட்சம்.
7.இருபாலையில் 3.5 பரப்பு புதிய வீடு விற்பனைக்கு 3 அறைகள் 140 லட்சம்.
தொடர்புகளுக்கு - 076 361 4997

1. செம்மணி வீதியில் நாயன்மார்க் கட்டு கேணியடியில் 18 பரப்பு காணி உண்டு.
2. பருத்தித்துறை நகருக்கு அண்மையில் தும்பளை கிழக்கு அருகில் உட்புறமாக 2 1/4 பரப்பு காணி உண்டு.
3. யாழ் பிறவுண் வீதியில் கந்தர்மடசந்திக்கு அண்மையில் 4 பரப்பு காணி உண்டு.
4. யாழ் பொஸ்கோ பாடசாலைக்கு அண்மையில் 3 பரப்பு காணியும் வீடும் உண்டு.
5. நக்காலேனில் வீடும் 8 பரப்பு காணியும் உண்டு.
6. யாழ் நல்லூர் கோயிலுக்கு அண்மையில் 5 பரப்பு காணி உண்டு.
7.யாழ் பரமேஸ்வரா சந்தி அருகாமை பலாலி வீதியில் 6 பரப்பு காணியும், சுண்டுக்குழி கொழும்புத் துறை வீதியில் வீட்டுடன் 3 பரப்பு காணியும், கோப்பாய் நாவலர் பாடசாலைக்கு அருகில் 6 பரப்பு காணி 14" பாதையுடன் விற்பனைக் உண்டு.
தொடர்புகளுக்கு - 077 857 8528

1. கல்வியங்காட்டில் 2 பரப்பு காணி விற்பனைக்குண்டு. பருத்தித்துறை வீதிக்கு 550மீ தூரத்தில்.
தொடர்புகளுக்கு - 076 361 4997
075 504 7001

## மரக் கன்றுகள் விற்பனைக்கு

1 1/2 மாத மஞ்சள் கன்று விற்பனைக்கு உண்டு. வீட்டிற்கு எடுத்து வந்து தரப்படும்.
தொடர்புகளுக்கு - 021 492 7778

தரமான இஞ்சி கன்று விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு - 021 492 7778

## ஓடியல் மா தேவை

ஒடியல் மா மொத்தமாக கொள்வனவிற்கு தேவை.
தொடர்புகளுக்கு - 076 7403 814

## பனங்கிழங்கு தேவை

பனங்கிழங்கு மொத்த கொள்வனவுக்கு தேவை.
தொடர்புகளுக்கு - 076 011 7002

## வாகனம் தேவை

டி ராக்டர் பெட்டி தேவை. முச்சக்கர வாகனம் தேவை.
தொடர்புகளுக்கு - 076 7403814

## கல்வி

மிருதங்கம், வயலின், கிட்டார், ஓகன், வாய் பாட்டு கற்க விரும்பும் மாணவர்கள் தொடர்பு கொள்ளவும்.
தொடர்புகளுக்கு - 077 022 9400

சகல வகையான இசை வகுப்புகளும் நடைபெறுகின்றன.
தொடர்புகளுக்கு - 021 222 4242
077 556 3030

# விமல் பொறுப்புணர்வுடன் கருத்துரைக்க வேண்டும்!

## ஆளும் கட்சிக்குள்ளிருந்து எச்சரிக்கை




இஸ்லாமிய அடிப்படைவாதக் கொள்கையினையுடைய வர்கள் எவரும் அரசாங்கத்தில் கிடையாது. கைத்தொழில் வளங்கள் அமைச்சர் விமல் வீரவன்ஸ பொறுப்புடன் கருத்துரைக்க வேண்டும்.

முரண்பாட்டைத் தோற்றுவிக்கும் கருத்துக்கள் தொடர்பில் மக்கள் மத்தியில் தவறான நிலைப்பாட்டை தோற்றுவிக்கும் என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துக் கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

இஸ்லாமிய அடிப்படைவாதக் கொள்கையை உடைய வர்களை அரசாங்கத்தில் ஒருபோதும் இணைத்துக் கொள்ள மாட்டோம் என்பது பொதுஜன பெரமுனவின் அடிப்படை கொள்கையாகக் காணப்பட்டது.

அடிப்படைவாதிகளுடன் ஒன்றிணைந்து ஆட்சியமைக்கக் கூடாது என்பதற்காகவே நாட்டு மக்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வழங்கி தனித்த அரசாங்கத்தை அமைத்துள்ளார்கள்.

நாட்டில் இஸ்லாமிய அடிப்படைவாதம் தலைதூக்க முடியாத அளவிற்கு தேசியப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. அரசாங்கத்துக்குள் இஸ்லாமிய அடிப்படைவாதக் கொள்கையுடையவர்கள் உள்ளார்கள் என கைத்தொழில் துறை அமைச்சர் விமல் வீரவன்ஸ குறிப்பிட்டுள்ள கருத்து முற்றிலும் தவறாகும்.

அடிப்படைவாத கொள்கையைக் கொண்டவர்களை உள்ளடக்கி ஆட்சியமைக்கவில்லை.

முரண்பாட்டைத் தோற்றுவிக்கும் கருத்துக்கள் அரசாங்கம் தொடர்பில் மக்கள் மத்தியில் தவறான நிலைப்பாட்டைத் தோற்றுவிக்கும். ஆகவே, அரசாங்கத்தின் உறுப்பினர்கள் அனைவரும் பொறுப்புடன் செயற்படுதல் அவசியமாகும். ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்களைப் பாதுகாக்க வேண்டிய தேவை அரசாங்கத்துக்குக் கிடையாது.

கறுப்பு ஞாயிறுதினப் போராட்டம் தொடர்பில் தற்போது கருத்துரைக்கும் எதிர்தரப்பினர் கடந்த கால நிகழ்வுகளை மறந்து விட்டார்கள்.

கடந்த அரசாங்கம் இஸ்லாமிய அடிப்படைவாதத்தை இல்லாதொழிக்க உரிய நடவடிக்கைகளை உரிய காலத்தில் முன்னெடுத்திருந்தால் தற்போது கறுப்பு ஞாயிறு போராட்டத்தை முன்னெடுக்க வேண்டியதேவை ஏற்பட்டிருக்காது.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பிலான அறிக்கையில் ஒரு சிலகுறைபாடுகள் காணப்படுகின்றன.

குறைபாடுகள் பரிசீலனை செய்யப்படுகின்றன. அறிக்கையில் குறிப்பிடப்பட்ட பல யோசனைகள் இனி வரும் காலங்களில் முறையாக செயற்படுத்தப்படும். – என்றார்

## பாலியல் தொழிலுக்காக யுவதியை அனுப்பிய பெண் ஒருவர் கைது!

பாலியல் தொழிலாளிகளாக யுவதிகளை ஓமான் நாட்டுக்கு அனுப்பி வைக்கும் சட்டவிரோத செயலில் ஈடுபட்டு வந்தார் என சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பெண்ணை 26 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு வவுனியா நீதிவான் நேற்று (சனிக்கிழமை) உத்தரவிட்டுள்ளார்.

ஓமானில் இருந்து வந்த இந்த பெண் தொடர்பாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் அதிகாரிகள் மேற்கொண்ட விசாரணைகளுக்கு அமைய பொலிஸார் பெண்ணை கைது செய்திருந் தனர்.

வவுனியா பம்பைமடு இராணுவ தனிமைப்படுத்தல் நிலையத்தில் இந்த பெண்ணை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபரான பெண் கிரிகொல்ல கிராந்துருகோட்டே பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயதான ஆர்.எம். குசுமாவதி என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மஹியங்கனையில்வெளிநாட்டுவேலை வாய்ப்பு முகவர் நிலையத்தை நடத்தி வந்துள்ள இந்தப் பெண், யுவதிகளுக்கு வெளிநாடுகளில் தொழில் பெற்று தருவதாகக் கூறி, ஓமான் சுல்தான்களுக்கு சிறு தொகைப் பணத்துக்குப் பாலியல் தொழிலாளிகளாக விற்றுள்ளார் என விசாரணைகளில் தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கொழும்பு சிறையில் திடீர் சோதனை: பல மர்மமான பொருள்கள் மீட்பு!

*கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலைக்குள் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின் போது பல்வேறு தடை செய்யப்பட்ட பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.*

*05 கையடக்க தொலைபேசிகள் ,14 சிம் அட்டைகள், கையடக்க தொலைபேசிக்கான 03 மின்னேற்றிகள், கத்தரிக் கோல்கள் இரண்டு, 28 போதைப் பொருள் பக்கெட்டுக்கள், ஹெரோயின் என நம்பப்படும் ஒரு வகை தூள் அடங்கிய டப்பா, புகையிலைத் துண்டுகள் உள்ளிட்ட பல பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என சிறைச்சாலைகள் திணைக்கள ஊடகப் பேச்சாளர் சிறைச்சாலைகள் ஆணையாளர் ( நிர்வாகம் மற்றும் புனர்வாழ்வு) சந்தன ஏக்கநாயக்க கூறினார்.*

*கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையின் அத்தியட்சகரின் கோரிக்கைக்கு அமைய, கடமையில் உள்ள பொலிஸ் விசேட அதிரடிப் படை மற்றும் வெலிக்கடை, கொழும்பு விளக்கமறியல் சிறை ஆகியவற்றின் அதிகாரிகள் இணைந்து இந்த திடீர் சோதனையை மேற்கொண்டுள்ளனர்.*

*சோதனையின் போது கைப்பற்றப்பட்ட பொருள்கள் தொடர்பாக சிறைச்சாலைகள் திணைக்களத்தால் மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.*





## லக்ஷ்மி நாராயணா திருமண சேவை

**இல:- 266 பலாலி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம்.** **தொ.பே. 077 197 1667 / 077 316 4796**

### மணமகன் விவரம்

பிறந்த திகதி – 1988.11.20 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – உத்தரட்டாதி 4
கி.பா – 23 செவ் – 06 இல்
தகைமை – B.sc Engineer தொழில் – UK PR
எதிர்பார்ப்பு – Engineer உயர் பட்டதாரி UK +இலங்கை மணமகள்.

பிறந்த திகதி – 1988.05.30 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – விசாகம் 3
கி.பா – 36 செவ் – 10 இல்
தகைமை – A/L தொழில் – சொந்த கடை
எதிர்பார்ப்பு – A/L படித்த மணமகள் தேவை.

பிறந்த திகதி –1988.04.07 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – கேட்டை
கி.பா – 13 செவ் – 9 இல்
தகைமை – B.sc Engineer
தொழில் – Mechanical Engineer Singapore
எதிர்பார்ப்பு – B.sc, BIT Cima மணமகள் தேவை.

பிறந்த திகதி – 1989.01.27 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – அத்தம்
கி.பா – 21 செவ் – 2 இல்
தகைமை – AL தொழில் – சொந்த கடை
எதிர்பார்ப்பு –AL படித்த மணமகள் தேவை.

பிறந்த திகதி – 1992.06.06 மதம் – இந்து
ஜாதி – P ஆண் நட்சத்திரம் – மகம்
கி.பா – 40 செவ் – 07 இல்
தகைமை – பயிலுனர் ஆசிரியர்
தொழில் – ஆசிரியர்
எதிர்பார்ப்பு – பட்டதாரி ஆசிரிய அரச சேவை மணமகள்.

பிறந்த திகதி – 1990.07.10 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – திருகோணம்
கி.பா – 32 செவ் – 07 இல்
தகைமை – Computer Engineer
தொழில் – சிங்கப்பூர் Work
எதிர்பார்ப்பு – Engineer or Doctor மணமகள் தேவை.

பிறந்த திகதி – 1988.11.25 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – மிருகசீரிடம் 2
கி.பா – 53 செவ் – 02 இல்
தகைமை – Elecronic Engineer
தொழில் – சொந்த நிறுவனம் உரிமையாளர்.
எதிர்பார்ப்பு – AL மேல் படித்த மணமகள் தேவை. சீதணம் பெரிதாக எதிர்பார்க்கவில்லை.

பிறந்த திகதி – 1985.05.22 மதம் – இந்து
ஜாதி – விஸ்வகுலம் நட்சத்திரம் – மிருகசீரிடம்
கி.பா – 8 செவ் – 10 இல்
தகைமை – Industrial Engineer தொழில் – Dubai Engineer
எதிர்பார்ப்பு – பட்டதாரி உள்நாடு வெளிநாடு மணமகள்.

### மணமகள் விவரம்

பிறந்த திகதி – 1990.10.23 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – கேட்டை
கி.பா – 26 செவ் – 07 இல்
தகைமை – B.com தொழில் – D.O அரச சேவை
எதிர்பார்ப்பு – அரச சேவை மணமகன் தேவை.

பிறந்த திகதி – 1994.04.23 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – பூசம் 4
கி.பா – 63 செவ் – 8 இல்
தகைமை – A/L Banking தொழில் – Bank Officer
எதிர்பார்ப்பு – அரச சேவை மணமகன் தேவை.

பிறந்த திகதி – 1996.08.10 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – திருகோணம் 3
கி.பா – 20 சூரி/செவ் – 11 இல்
தகைமை – Communication engineer
தொழில் – Company
எதிர்பார்ப்பு – அரச சேவை Singapore Australia பட்டதாரி மணமகன் தேவை.

பிறந்த திகதி – 1986.07.08 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – புனர்பூசம் 4
கி.பா – 44 செவ்/சூரி – 07 இல்
தகைமை – M.B.B.S தொழில் – Doctor
எதிர்பார்ப்பு – Doctor மணமகன் தேவை.

பிறந்த திகதி – 1990.06.24 மதம் – இந்து
ஜாதி – குருகுலம் நட்சத்திரம் – ரோகினி
கி.பா – 28 சூரி/செவ் – 12 இல்
தகைமை – B.sc M.sc தொழில் – பட்டதாரி ஆசிரியர்
எதிர்பார்ப்பு – வெளிநாடு பட்டதாரி மணமகன். வேறு குலத்தவர்களும் தொடர்புகொள்ளலாம்.

பிறந்த திகதி – 1988.11.12 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – கேட்டை 3
கி.பா – 30 சூரி/செவ் – 6இல்
தகைமை – M.B.B.S தொழில் – Doctor
எதிர்பார்ப்பு – Doctor மணமகன் தேவை.

பிறந்த திகதி – 1994.03.12 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – பூரட்டாதி 3
கி.பா – 45 சூரி/செவ்– 12 இல்
தகைமை – B.sc M.sc
தொழில் – விரிவுரையாளர் Campus அரசசேவை
எதிர்பார்ப்பு – பட்டதாரி அரச சேவை மணமகன்.

பிறந்த திகதி – 1990.09.27 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – மூலம்
கி.பா – 34 சூரி / செவ் – 6 இல்
தகைமை – B.sc, M.sc
தொழில் – ஆராய்ச்சியாளர் Australia
எதிர்பார்ப்பு – Australia+ Newzealand PR பட்டதாரி மணமகன்.

**ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.**

**காலைக்கதிர் தொலைபேசி 021 222 3000**

## மணமகள் தேவை

பிறந்த திகதி – 23.12.1978, மதம் – இந்து V, நட்சத்திரம் – அத்தம், கி.பா – 45, சூரி/ செவ் – 7 இல், தொழில் – அரச சேவை சாரதி மணமகன்.

பிறந்த திகதி – 19.02.1973, மதம் – இந்து V, நட்சத்திரம் – பூரம் 4, கி.பா – 24, செவ் – 12 இல், தொழில் – Company Manager மணமகன்.

**தொடர்புகளுக்கு - 077 197 1667**

# ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் புதிய விசாரணை அவசியம்!

## சஜித் கோரிக்கை



ஈஸ்டர் தாக்குதலின் உண்மையான சூத்திரதாரிகளை வெளிக்கொணர அரசியல் பேதங்களை கடந்து புதிய திட்டத்தை ஆரம்பிக்குமாறு எதிர்க்கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு கூறினார்.

செப்ரெம்பர் 11 தாக்குதலுக்குப் பின்னால் உள்ள சூத்திரதாரிகளை அடையாளம் கண்டு தண்டிக்க அமெரிக்க அரசு எடுத்த நடவடிக்கைகளை இலங்கை ஓர் உதாரணமாக கொள்ளவேண்டும் என அவர் கூறினார்.

மேலும் இரட்டை கோபுரத் தாக்குதல் தொடர்பாக சுயாதீன ஆணைக்குழுவை நியமித்து அவர்களின் பரிந்துரைகளை அமுல்படுத்தியதன் மூலம் ஆராயப் பட்டதாகவும் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில் ஈஸ்டர் தாக்குதல்களின் முக்கிய சூத்திரதாரி ஓடி மறைவதற்கு முன், உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தை சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.

# வஹாப் மற்றும் ஜிஹாத் கொள்கைகளை பரப்பிய ஒருவர் மாவனெல்லயில் கைது!

இலங்கையில் வஹாப் மற்றும் ஜிஹாத் கொள்கைகளை பரப்பிய குற்றச்சாட்டில் ஒருவரைக் கைது செய்துள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ் மா அதிபருமான அஜித்றோஹண தெரிவித்தார்.

மாவனெல்ல, முருத்தவளை பகுதியைச் சேர்ந்த 60 வயதுடைய ஜமாத் – இ – இஸ்லாமி அமைப்பின் முன்னாள் தலைவர் ரஷீட் ஹஜ்ஜுல் அக்பர் என்பவரே இவ்வாறு பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். குறித்த நபர் கொழும்பு, தெமட்டகொடை பகுதியில் வைத்து கடந்த வெள்ளிக் கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் மாவனெல்ல புத்தர் சிலை உடைப்பு விவகாரம் தொடர்பில் கைது செய்யப்பட்ட நபரின் நெருங்கிய உறவினர் என்பதுடன் ஜமாத் – இ – இஸ்லாமி அமைப்பின் வெளியீடுகளில் வஹாபிசம் மற்றும் ஜிகாத் கொள்கைகளை ஊக்குவிக்கும் கட்டுரைகளை எழுதி வந்துள்ளார் எனப் பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

# ஈஸ்டர் தாக்குதல் விசாரணை ஆணைக்குழுவால் 22 பகுதி இரகசிய அறிக்கை சட்டமா அதிபரிடம்!

உயிர்த்த ஞாயிறு தின தொடர் தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில், இரகசிய விடயங்கள் அடங்கின எனக் கூறப்படும் 22 பகுதிகள் சட்டமா அதிபர் ஜனாதிபதி சட்டத்தரணி தப்புல டி லிவேராவிடம் நேற்று கையளிக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதியின் சட்டப் பிரிவு பணிப்பாளர் நாயகம், சட்டத்தரணி ஹரிகுப்த சேனாதீரவால் இந்த அறிக்கையின் பாகங்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

இதற்கு முன்னர் ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையின் 65 பாகங்கள் கடந்த 2 ஆம் திகதி சட்டமா அதிபரிடம் கையளிக்கப்பட்டிருந்தன.

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை 87 பாகங்களைக் கொண்டதாகும்.

இந்நிலையில், நேற்று கையளிக்கப்பட்ட 22 பாகங்களும் ஆணைக்குழு முன்னிலையில் வழங்கப்பட்ட சாட்சியங்கள் மற்றும் அதிக இரகசியமானவை என சட்டத்தரணி ஹரிகுப்த சேனாதீர தெரிவித்தார்.

# புலமைப் பரிசில்பரீட்சை உயர்தரப் பரீட்சைகள் ஒத்திவைக்கப்படலாம் என்கிறார் ஆணையாளர்

புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் கல்வி பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைகள் ஒத்திவைக்கப்படலாம். கல்விஅமைச்சுடன் கலந்துரையாடி இறுதி தீர்மானம் மேற்கொள்ளப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித தெரிவித்தார்.

இந்த வருடம் இடம்பெற உள்ள 5 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சை மற்றும் கல்வி பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை ஒத்திவைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படும் செய்தி தொடர்பாக குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் –

5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சை பொதுவாக ஓகஸ்ட் மாதத்திலேயே



இடம்பெறுகின்றது. அத்துடன் கல்விபொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை டிசெம்பர் மாதத்தில் இடம்பெறுகின்றது. என்றாலும் இந்தவருடம் தரம் 5 புலமைப்பரிசில் மற்றும் கல்விபொதுத்தராதர உயர்தரப் பரீட்சைகள் சில மாதங்களுக்கு ஒத்திவைக்கப்படலாம்.

அத்துடன் இதுதொடர்பாக கல்வி அமைச்சுடன் கலந்துரையாடி வருகின்றோம். இதன்போது இணக்கப்பாட்டுக்கு வந்த பின்னரே பரீட்சைகள் இடம்பெறும் நேரசூசியை அறிவிக்க முடியும்.

குறித்த பரீட்சைகளை உரிய நேரசூசியின் பிரகாரம் நடத்துவதற்குப் பரீட்சைகள் திணைக்களத்துக்கு முடியுமாக இருக்கின்றபோதும், கொரோனாத் தொற்று நிலைமையால் கற்றல் நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்ள மாணவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்காதமை காரணமாக, சில மாதங்களுக்கு கற்றல் நடவடிக்கைகளை மேற்கொண்ட பின்னர் பரீட்சைகளை நடத்துவதற்கே நினைத்திருக்கின்றோம்.

அதன் பிரகாரம் உயர்தரப் பரீட்சை மற்றும் 5 ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சைகளை நவம்பர் மாதம்வரை ஒத்திவைப்பதற்கு ஆலோசித்து இருக்கின்றோம். என்றாலும் இதுதொடர்பான இறுதித் தீர்மானத்தை கல்வி அமைச்சாலேயே மேற்கொள்ளவேண்டும். – என்றார்.







## இலங்கை அரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வரப்படவுள்ள 46.1 பிரேரணை வரைவைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரித்து தமிழ் மக்களின் முதுகில் குத்தி துரோகம் செய்துள்ளது எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முன்வைத்த குற்றச் சாட்டு தொடர்பில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

பொறுப்புக்கூறல் விடயம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இருந்து வெளியே கொண்டுவரப்பட வேண்டும். அது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்தவதற்கு ஏதுவாக செயலாளர் நாயகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தான் கடந்த ஜனவரி 14ஆம் திகதி எங்களுடைய கடிதத்தில் நாங்கள் சுட்டிக்காட்டியிருக்கின்றோம்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் தற்போது முன்வைக்கப்பட்டிருக்கின்ற பிரேரணை வரைவிலே நாங்கள் கேட்டுக்கொண்ட விடயங்கள் இருக்கின்றன. இது மிகவும் பிரயோசனமான ஒரு பிரேரணை. இந்தப் பிரேரணை நிறைவேற்றப்படா விட்டால் எந்தச் சர்வதேச தளத்திலும் இலங்கை சம்பந்தமான விடயம் இல்லாமல் போய்விடும். அதைத்தான் இலங்கை அரசும் எதிர்பார்க்கின்றது. ஆகவே, இந்த விடயத்தில் இலங்கை அரசு வென்றதாக இருக்கக்கூடாது.

எங்கள் சார்பிலே இயங்குகின்ற இந்த இணை அனுசரணை நாடுகளுக்கு நாங்கள் பலம் சேர்க்க வேண்டும். இந்தப் பிரேரணை நிறைவேற்றப்படுவதற்கு எங்களால் இயன்ற அனைத்தையும் செய்ய வேண்டும். இதனை நிறைவேற்றினால்தான் அடுத்த இரண்டு வருட காலத்துக்காவது ஒரு சர்வதேச மட்டத்திலே இலங்கை சம்பந்தமான மேற்பார்வை தொடர்ந்து இருக்கும்.

ரஷ்யாவும் சீனாவும் இலங்கை சம்பந்தமான விடயத்திலே வீட்டோ அதிகாரத்தைப் பாவிப்போம் என்று வெளிப்படையாகவே சொல்லியிருக்கின்றன.

தற்போதைக்கு பாதுகாப்பு சபை மூலமாக ஒரு தீர்மானத்தின் மூலமாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு எடுத்துச் செல்லப்படுவதற்கான சாத்தியக்கூறு கிடையாது. எனினும், ஏதாவது ஒரு விதத்திலே பாதுகாப்புச் சபையிலே இந்த விவகாரம் எடுக்கப்பட வேண்டும் என்ற முயற்சி தொடர்ந்து நடைபெறுகின்றது.

இவ்வாறான நிலைமையில் தற்போது கொண்டுவரப்பட்டிருக்கும் 46.1பிரேரணை நிறைவேற்றப்பட வேண்டும். அந்தப் பிரேரணை நிறைவேற்றப்படக் கூடாது என்ற அடிப்படையில் தன்னுடைய முழுமையான முயற்சிகளை இலங்கை அரசு எடுக்கின்றது.

ஆகவே, இந்தப் பிரேரணை வேண்டாம் என்று சொல்கின்ற தரப்புக்கள் அனைத்தும் இலங்கை அரசுக்குச் சார்பாகச் செயற்படுகின்றன. அது நாடுகடந்த தமிழீழ அரசாங்கமாக இருக்கலாம். அது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியாக இருக்கலாம். பிரேரணையை எதிர்ப்பவர்கள் இலங்கை அரசின் ஊதுகுழல்களாகச் செயற்படுபவர்களாகவே கருப்படுவார்கள் – என்றார்.

# வேலை வாய்ப்பு

வடமாகாணத்தில் பிரபலமாக இயங்கி வரும் என் பிளாஸ் சுப்பர் டிடயண்ட் (NFLASH SUPER DETERGENT) நிறுவனத்திற்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா போன்ற இடங்களில் பின்வரும் தகுதியுடைய ஆள்கள் வேண்டப்படுகின்றது.

- விற்பனை பிரதிநிதி (Sales Representotive)
- சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் (Marketing Staff)
- காட்சியறை முகாமையாளர் (Show Room Manager)

* விண்ணப்பதாரி 18வயது தொடக்கம் 50வயது வரை இருத்தல் வேண்டும்.
* முன் அனுபவம் விரும்பத்தக்கது.

உங்கள் விண்ணப்பங்களை **607, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு 22.03.2021இற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கலாம்.


## கொரோனாக் குணமடைவு 84 ஆயிரம் தாண்டியது!

இலங்கையில் கொரோனா தொற்றில் இருந்து மேலும் 295 பேர் பூரணமாக குணமடைந்து நேற்று (சனிக்கிழமை) வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து நாட்டில் இது வரை கொரோனாத் தொற்றில் இருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 84 ஆயிரத்து 253 ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில் இதுவரையில் 87 ஆயிரத்து 286 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதேவேளை, கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 525 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


## தேவை

உணவகமொன்றிற்கு அனுபவமிக்க கொத்து, ரைஸ் போடும் சமையல்காரர் தேவை.
தொடர்புகளுக்கு:- 077 909 0408
076 804 5014

## தேவை

பாவித்த பழுதடைந்த வீணை விலைக்கு தேவை
**183 முதலாம் குறுக்கு தெரு யாழ்ப்பாணம்.**
**0775563030**

















இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.03.2021 இல் வெளியிடப்பெற்றது.

# அ’புரவுக்கு காணி ஆவணங்கள் கடத்தல் நியாப்படுதுகிறார் சுரேன் ராகவன் எம்.பி.!

**கொழும்பில் இருக்கும் காணி ஆணையாளரிடமிருந்து கிடைக்க வேண்டிய ஒழுங்கான ஒத்துழைப்புக்கள் வலுவாக கிடைக்க வேண்டும் என்பதற்காகவே வடமாகாண காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் ஆவணங்கள் அநுராதபுரத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன என மொட்டுக்கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரும், சிறிலங்கா சுதந்திர கட்சியின் வன்னி மாவட்டத் தலைவருமான காலநிதி சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.**



வவுனியா கந்தசுவாமி கோவிலுக்கு நெற்றுவிஜயம் மேற்கொண்ட அவர் விசேட பூஜை நிகழ்வில் கலந்து கொண்ட பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

நான் வடமாகாண ஆளுநராகப் பதவி வகித்த 10 மாதங்களில் எட்டாயிரம் குடும்பங்களிற்கு அரச காணிகளை வழங்கியிருந்தேன். இராணுவத்திடம் இருந்த இரண்டாயிரம் ஏக்கர் காணிகள் பொதுமக்களிடம் கையளித்திருந்தேன். இடைப்பட்ட காலத்தில் சில பிழைகள் நடந்தன என நான் கேள்விப்பட்டேன். இதேவேளை, கொழும்பில் இருக்கும் காணி ஆணையாளரிடமிருந்து கிடைக்கவேண்டிய ஒழுங்கான ஒத்துழைப்புக்கள் வலுவாக கிடைக்க வேண்டும் என்பதற்காகவே வடமாகாண காணி ஆவணங்கள் அனுராதபுரத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனவே தவிர, வடமாகாணத்தைச் சேர்ந்த எந்த அதிகாரங்களும் பறிக்கப்படவில்லை. அவ்வாறு பறிக்கப்படக்கூடாது. பறிக்கப்படவும் முடியாது.

தற்போது நான் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக வன்னிக்கு நியமிக்கப்பட்டதன் மூலம் தமிழ் தேசத்திற்காக நான் செய்யவேண்டிய பணியை திரும்பவும் என்னிடம் இறைவன் வழங்கியுள்ளான் எனவே நினைக்கிறேன். வடமாகாணத்திலேயே குறிப்பாக வீழ்த்தப்பட்ட சமூகங்கள் வாழ்கின்ற வன்னியை முழுமையாக மாற்றியமைக்க என்னுடைய முயற்சிகளை எடுக்க வேண்டியுள்ளது.

மன்னார் மாவட்டம் காலம் காலமாக பின்தங்கிய பகுதியாக இருக்கிறது. அந்த நிலை மாறவேண்டும். நாட்டின் ஆழமான ஒரு ஜனநாயகத்தை உருவாக்குவதற்கான அடித்தளத்தை உருவாக்க வேண்டும்.

விசேடமாக தமிழர் தேசத்தில் இழந்து போன ஜனநாயகத்தையும், இறந்து போன சம உரிமைகளையும் பெறுவதற்கான முயற்சிகளை நாம் எடுக்கவேண்டும். அதனை நான் ஆளுநராக இருந்து ஏற்கனவே செய்திருக்கின்றேன். எமது மக்களை ஜனநாயகத்தின் பாதையிலே நடாத்திச் செல்வதற்கான வழிமுறைகளை கூட்டுமுயற்சியாக செய்யவேண்டும் என்பதே என்னுடைய பிரார்த்தனை. – எனத் தெரிவித்தார்.

## பருத்தித்துறையில் சிக்கினான் திருடன்; களவாடப்பட்ட 21 சைக்கிள்கள் பறிமுதல்



(எஸ்.நிதர்ஷன்)

பருத்தித்துறையில் நீண்டகாலம் திருட்டில் ஈடுபட்டு வந்த அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயது இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பருத்தித்துறை சிவன் கோயிலுக்கு அண்மையில் நடமாடியபோது சந்தேகத்தின் பேரில் குறித்த இளைஞர் கைதுசெய்யப்பட்ட நிலையில் அவரிடம் மேற் கொள்ளப்பட்ட விசாரணையில் சைக்கிள் திருட்டுக்களில் ஈடுபட்டமை தெரியவந்தது எனப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

சந்தேகநபரால் திருடப்பட்ட 21 சைக்கிள்களைப் பொலிஸார் பறிமுதல் செய்தமையுடன் மேலும் சில சைக்கிள்கள் மீட்கப்படவுள்ளன என்றும் குறிப்பிட்டனர்.

இவ்வாறு திருடப்பட்ட சைக்கிள்களைச் சந்தேகநபர் விற்பனை செய்து பணம் பெற்றுள்ளார். இந்நிலையில், சைக்கிள்களைப் பறிகொடுத்தவர்கள் உரிய ஆவணங்களுடன் வருமாறு பருத்தித்துறைப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

## மத்தியில் அரசுடன் கூட்டணி; மாகாண சபையில் தனி வழி

### சுதந்திரக் கட்சி அதிரடி முடிவு

இவ்வருடத்துக்குள் நடைபெறும் என எதிர்ப்பார்க்கப்படும் மாகாண சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனித்துப் போட்டியிடக்கூடும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற விசேட கூட்டமொன்றிலும் இது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிட விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருவதற்கும் இந்தக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான கூட்டணியில் சுதந்திரக் கட்சி பங்காளியாக இருப்பதால், கூட்டணியாகத் தேர்தலை எதிர்கொள்வதற்கு அழைப்பு விடுக்கப்படும் பட்சத்தில் அது குறித்து பரிசீலிக்க வேண்டும் எனவும், தேவையான இட ஒதுக்கீடுகள் கிடைக்காத பட்சத்தில் தனி வழி செல்வதே சிறந்தது எனவும் கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, மாகாண சபைத் தேர்தலில் தனி வழி சென்றால்கூட அரசியிலிருந்து சுதந்திரக் கட்சி வெளியேறாது எனவும், மத்தியில் கூட்டணி பயணம் தொடரும் எனவும் சுதந்திரக் கட்சியின் முக்கிய உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

## வெடுக்குநாறி கோவில் வழக்கு முதிர்ச்சியடையாத விண்ணப்பம்!

### சட்டத்தரணி சயந்தன் மன்றில் விளாசல்

வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் கோயில் வழக்கில், யார் எவ்வாறான குற்றம் செய்தார்கள் என்பது தெளிவற்ற நிலையில், பரிபாலன சபையினரை நீதிமன்றில் ஆஜராக உத்தர விடுமாறு பொலிஸார் கோருவதென்பது முதிர்ச்சியடையாத விண்ணப்பம் என தாம் ஆட்சேபித்தார் என சட்டத்தரணி கே.சயந்தன் தெரிவித்துள்ளார்.

வவுனியா, வெடுக்குநாறிமலை ஆதி லிங்கேஸ்வர் ஆலயம் தொடர்பான வழக்கு வவுனியா நீதிமன்றில் நேற்று முன்தினம் (வெள்ளிக்கிழமை) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

இந்நிலையில், இந்த விசாரணையின் பின்னர், ஆலய நிர்வாகத் தினர் சார்பாக ஆஜரான சட்டத்தரணி சயந்தன் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் –

‘வெடுக்குநாறி ஆதி லிங்கேஸ் வரர் ஆலய நிர்வாகத்திற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கில், முன்னைய வழக்கினைப் போலவே தொல்பொருள் சின்னங்களைச் சேதப்படுத்தினார்கள் என்பதான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு, ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட ‘பி’ அறிக்கைக்கு மேலதிகமாக மேலும் ஓர் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு அழைக்கப்பட்ட போது, ஆலயத்தின் தலைவர் மற்றும் செயலாளரை நீதிமன்றில் பிரச்சன்னமாகுமாறு அறிவித்தல் அனுப்புமாறு பொலிஸார் நீதிமன்றில் விண்ணப்பம் செய்தார்கள். அத்துடன், வழக்குத் தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெறவேண்டியிருப்பதாகவும் விண்ணப்பம் செய்திருந்தனர்.

புரியப்பட்ட குற்றம் என்ன, அதைப் புரிந்தவர்கள் யார், அவர்களுக்கு எதிராக சாட்சியங்கள் என்ன போன்ற விடயங்கள் தெளிவற்று இருக்கின்றமையே வழக்கு தொடுநர்கள் சட்டமா அதிபரிடம் ஆலோசனையைப் பெறு வதற்குக் காரணமாகவுள்ளது.

இந்நிலையில், பரிபாலன சபையினரை நீதிமன்றில் தோன்றுமாறு அறிவித்தல் வழங்குமாறு கோருகின்றமை ஒரு முதிர்ச் சியடையாத விண்ணப்பம் என நாங்கள் ஆட்சேபித்தோம்.

அந்தவகையில், பரிபாலன சபைக்கு அறிவித்தல் அனுப்பும் விண்ணப்பத்தை நீதிவான் நிராகரித்தமையுடன், வழக்கு விசாரணையை எதிர்வரும் ஜூன் 20ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார். – எனக் குறிப்பிட்டுள்ளார்.

இன்றைய வழக்கு விசாரணையில், ஆலய நிர்வாகத்தினர்களான தமிழ் செல்வன், சசிகுமார், பூசகர் மதிமுகராசா ஆகியோர் நீதிமன்றிற்கு வருகைதந்த போதும் மன்றில் பிரசன்ன மாகியிருக்கவில்லை. அவர்கள் சார்பாக சட்டத்தரணிகளான கே.சயந்தன் உட்பட பலர் ஆஜராகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.


